பக்கங்கள்-16 | 31.மார்கழி.2023 | விலை-50.00






# தினப்புயல்

PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 427



## அரச பொறிக்குள் சிக்கிய தமிழரசுக் கட்சியினால் பிளவடைந்துபோன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## ஜனாதிபதித் தேர்தலும், கட்சிகளின் வகிபாகமும் - வெற்றி யாருக்கு?

## தமிழரசுக் கட்சி உடையுமா? – நிலாந்தன்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# அரச பொறிக்குள் சிக்கிய தமிழரசுக் கட்சியினால் பிளவடைந்துபோன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



தமிழ் மக்களின் ஏகோபித்த உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் ஒரு அரசியல் கட்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிமுகம் செய்துவைத்தது தான் தமிழ்த் தேசியக் கூடடமைப்பு. அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பம் என்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியிடமே கையளிக்க இருந்த நிலையில், விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைப்பாட்டில் அதை நிராகரித்து, வன்னியில் இருந்து கொழும்பு சென்ற ஆனந்த சங்கரி, அரசின் உயர் பாதுகாப்புடன் போராட்டம் மௌனிக்கும் வரை வாழ்ந்து வந்தார்.

2001ஆம் ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்ப கட்ட நிகழ்வுகள் ஊடகவியலாளர் தராகி என்றழைக்கப்படும் சிவராம் அவர்களால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட நிலையில், 2001-2004 காலகட்டத்தில் சமாதானப் பேச்சுக்கள் உள்ளிட்ட விடயங்களும் இடம்பெற்றது. இப்பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு அரசியல் கட்டமைப்பாக விடுதலைப் புலிகளின் செய்திகளை தாங்கிச் செல்கின்றவர்களாகவே செயற்பட்டு வந்தனர்.

2009 போர் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகள் படிப்படியாக மாற்றம் காண ஆரம்பித்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை மௌனிப்படையச் செய்த அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாமல் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு, 2023 ஆம் ஆண்டு அதனையும் நிறைவுக்குக் கொண்டு வந்துள்ளது.

அது எந்த அடிப்படையில் என்று பார்க்கின்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த கட்சிகளை தனக்குள் உள்வாங்கிக்கொண்ட அரசாங்கம் ஒன்றாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒவ்வொன்றாகப் பிளவுபடுத்த ஆரம்பித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து கஜேந்திரகுமார் அணி முதலாவதாக வெளியேறுகின்றனர். நீண்ட இடைவெளியின் பின்னர் ஈ.பி.ஆர். எல்.எப் பின்னர் ரெலோவும், புளொட்டும் வெளியேறுகிறது. இடைக்கட்டத்தில் ஆனந்தசங்கரியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இழுத்துக்கொண்டு பின்னர் மாகாண சபைத் தேர்தலுடன் அவரையும் ஓரங்கட்டுகின்றது.

இந்த நிலையில் தான் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகள் இணைந்து DTNA என்கிற ஒரு கட்சியை உருவாக்கின. இந்தக் கட்சி உருவாக்க முன்னர் தமிழரசுக் கட்சியை ஓரங்கட்டுவதற்கு விக்னேஸ்வரன் தலைமையிலான அணி தமிழ் மக்கள் பேரவை என்கின்ற போர்வையில் செயற்பட்டது. அது வலுவானதொரு கட்டமைப்பைக் கொண்டிருக்கும் எனப் பலரும் நம்பினார்கள். தமிழரசுக் கட்சி தனித்துப்போக ஏனைய கட்சிகள் அனைத்தும் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்துகொண்டன. இணைந்து கொண்ட கட்சிகள் தமக்குள் தலைமையைப் பெற்றுக்கொள்ள பாரிய போட்டித்தன்மை நிலவி, அதிலிருந்து தமிழ் மக்கள் பேரவையாகச் செயற்பட்ட ஒவ்வொரு கட்சிகளும் உடைந்து சென்றன. இதில் ஆயுதம் ஏந்திய கட்சிகளை வன்முறையாளர்கள் எனச் சித்தரித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஆயுதம் ஏந்திய கட்சிகளை வெளியேறுமாக அறிவித்தது.

இவர்களின் தந்திர நகர்வு தனித்து பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஆசனங்களைக் கைப்பற்றுவதேயாகும். அந்த அடிப்படையில் தனித்து களமிறங்கிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு இரு ஆசனங்களையும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஒன்றையும் பெற்றுக்கொண்டது. யாழ் மாவட்டத்தில் இழக்கப்பட்ட ஆசனமாக அங்கஜன் இராமநாதன் வெற்றி பெறுகிறார். ஆக யாழில் நான்கு ஆசனங்களை தமிழரசுக் கட்சி இழக்கின்றது. வடக்கில் இந்த நான்கு ஆசனங்களும் இழக்கக் காரணம் என்ன என்பதை சுருக்கமாகப் பார்த்தால், தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புலிநீக்கிய அரசியலை மேற்கொண்டதேயாகும். இதேபோன்று வன்னியில் ஈ.பி.டி.பி ஒரு ஆசனத்தையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் காதர் மஸ்தான் ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியதன் ஊடாக தமிழரசுக் கட்சி இரண்டு ஆசனங்களை இங்கும் இழந்தது.



கிழக்கு மாகாணத்தை எடுத்துக்கொண்டால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் சார்பாக பிள்ளையான் ஒரு ஆசனத்தையும், பொதுஜன பெரமுன சார்பாக வியாழேந்திரன் ஒரு ஆசனத்தையும், அம்பாறையில் முஸ்லீம் தரப்பு ஒரு ஆசனத்தையும் ஆக மூன்று ஆசனங்களை அங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்தது. மொத்தமாக 09 ஆசனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தக்கவைக்க முடியாததன் காரணம் புலிநீக்க அரசியலேயாகும்.

அது மட்டுமன்றி தனியாக தமிழரசுக் கட்சி வெற்றி வாகை சூடுவோம் என்று தற்போது களத்தில் இறங்கியிருப்பது என்பது வடக்கில் ஒன்று, கிழக்கில் ஒன்று என்கிற ரீதியில் மாத்திரம் கைப்பற்றி காலப்போக்கில் தமிழரசுக் கட்சி ஆசனங்கள் எதுவும் இன்றி நலிவடைந்த கட்சியாக மாற்றம் பெறும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

குறிப்பாக தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு கடும் போட்டிகள் இடம்பெறுகிறது. கிழக்கில் யோகேஸ்வரனும், வடக்கில் சிறிதரன் - சுமந்திரன் போன்றவர்களும் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் மாதம் தெரிவும் இடம்பெறவிருக்கிறது. அதற்கிடையில் எதிர்ப்புக்கள் எதுவுமின்றி மீண்டும் மாவை சேனாதிராசாவை தெரிவு செய்தால் மாத்திரமே கூட்டமைப்பின் ஒற்றுமையினைக் கட்டியெழுப்ப முடியும். மாறாக சிறிதரன் - சுமந்திரன் - யோகேஸ்வரன் போன்றோர் கட்சிப் பொறுப்பை எடுத்துக்கொண்டால், அதில் பாரிய சிக்கல்கள் உருவாகி கட்சிக்குள் பிளவுகள் ஏற்படும் என்று நம்பப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் மத்தியில் மரியாதை இருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் நெருக்கமாகச் செயற்படுகின்ற ஜனாதிபதி சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகளை பிளவுபடுத்தியதைப்போன்று, தமிழரசுக் கட்சிக்குள்ளும் நுழைந்து அங்கும் பிளவுகளை ஏற்படுத்தி, அவருக்கு அரசினால் வழங்கப்பட்ட பணியை அழகாக முடித்துவிட்டு மறைந்த அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரைப்போன்று வெளிவிவகார அமைச்சுப் பதவியினை பெற்றுக்கொண்டு இருக்கும் நிலைமையே ஏற்படும். அத்துடன் அரசாங்கம் தமிழ்த் தரப்பை சின்னாபின்னமாக்குவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியும் சரியாக அமைந்துவிடும். அதன் பின்னர் வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தின் பெரும்பான்மையும் கேள்விக்குறியாக மாற்றப்படும்.

சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் தமிழர்களை முகவர்களாக்கி அக்கட்சிகளுக்கு வாக்களிக்கின்ற சூழலே எதிர்வரும் காலங்களில் உருவாகும். இவ்வாறான தோற்றப்பாடுகளை இல்லாமல் செய்யவேண்டுமாகவிருந்தால் பிளவுபட்டுக் கிடக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீளவும் ஒன்றிணைவது அவசியம். அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்கின்றார்களா என்றால் இல்லை. மாறாக தமது கட்சிகளை வளர்ப்பதிலேயே குறிக்கோளாக செயற்படுகின்றார்கள்.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் இனி ஜனநாயக வழியில் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாகவிருந்தால் அது தமிழரசுக் கட்சியினால் தான் முடியும் என நப்பாசை கொள்கிறார்கள். அது ஒருபோதும் சாத்தியப்படப்போவதில்லை. 25 வருடங்களாக கிடப்பில் இருந்த தமிழரசுக் கட்சியை தூசு தட்டி அழகு பார்த்தவர்கள் தான் விடுதலைப்புலிகள். அதனால் தான் இவர்களுடைய வெற்றியும் உறுதிப்படுத்தப்பட்டது.

இன்றைய சமகால அரசியல் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபடுவதையே சர்வதேசமும் எதிர்பார்த்தது. பூகோள அரசியலுக்குள்ளும் சிக்குண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதிருக்கக்கூடிய இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா இருவரையும் அரசியலில் இருந்து ஒருங்கட்ட அக்கட்சிக்குள் இருந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என்பது கவலைக்குரிய விடயம்.

வயதாகிவிட்ட இரா.சம்பந்தன் பங்காளிக் கட்சிகள் விலகிச்சென்றதும் யாருக்குத் தலைவர் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதேநேரம் தமிழரசுக் கட்சியை கட்டிக்காத்த மாவை போட்டியிலிருந்து ஒதுங்குவதன் ஊடாக, தான் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்படவேண்டும் என எதிர்பார்த்தார். ஆனால் அது நடக்கவில்லை. இந்த நிலையில் தான் இன்று தமிழரசுக் கட்சி பயணித்துக்கொண்டிருக்கிறது.

ஆகவே DTNAயாக செயற்படுகின்ற தரப்பினர் இன்று வலுவாக இருக்கிறார்களா? இல்லையா? என்பது அடுத்த பாராளுமன்ற தேர்தலில் தான் தெரியவரும். அதற்கு முன்னர் பலரும் பல எதிர்வு கூறல்களைக் கூறலாம். ஒற்றுமையே பலம் என்பது ஒரு பழமொழி. அதற்கேற்ப அந்த ஒற்றுமை கட்சிகளுக்கிடையே நிலவுமாகவிருந்தால் மட்டுமே தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் சிகரங்களை எட்ட முடியும்.

இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்கள் ஆகிறது. ஆனாலும் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எமக்கான தீர்வைப் பெற்றுத்தருவதாக இல்லை. மாறாக பேச்சுவார்த்தைகள் என்று பலவற்றை சந்தித்து, இறுதியில் ஏமாற்றத்தை சந்தித்தே மிச்சம். தற்போதும் கூட தமிழினத்தை ஏமாற்றுவதற்காகவே தான் ஒரு யதார்த்தவாதி என்றும், இந்த நாட்டை கட்டியெழுப்புவேன் என்றும், தமிழ் மக்கள் விடயத்தில் உள்நாட்டுப் பொறிமுறையின் மூலம் தீர்வைத் தருவேன் என கூறிக்கொண்டு ஜனாதிபதி ரணில் அவர்கள் தனது அரசியலை முன்னெடுத்து வருகிறார்.

ஒற்றுமைக்காக மாற்று வழிகளை கையாளுகிறோம் எனக் கூறிக்கொள்ளும் தமிழரசுக் கட்சி, தனிநபர் விருப்புக்களுக்காகவே செயற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஒருங்கிணைந்த ஒரு கூட்டு தமிழர் தரப்பில் இருக்குமாகவிருந்தால் மட்டுமே எதிர்வரும் காலங்களில் சர்வதேச நாடுகளுடனான அணுகுமுறைகளுக்கும் அதனை ஒரு பொறிமுறையாகக் கையாளுவதற்கும் ஏற்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும். தனித்தனியே தமிழ்க் கட்சிகள் பிரிந்து செயற்படுமாகவிருந்தால் மேலும் இந்த அரசாங்கம் மட்டுமல்ல, சிங்கள பேரினவாதிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் தமிழ் மக்களின் அனைத்து விடயங்களையும் கொண்டுவருவதற்கான சூழலும், மீண்டும் தமிழர் தாயகத்தில் ஒடுக்குமுறைக்கு எதிரான போர் ஆரம்பமாகும் என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை.

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## இயற்கைப் பேரிடரும், மக்களின் அவல நிலையும்

இலங்கையில் இவ்வாண்டு மிக அதிக அளவிலான மழைவீழ்ச்சி கிடைத்துக்கொண்டிருக்கும் நிலையில் மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்து வருகின்றனர். இவ்வாண்டு நடுப்பகுதியில் மேல், சப்ரகமுவ, ஊவா, மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் மிக அதிகளவிலான மழைவீழ்ச்சியுடன் பெரும் சூறைக்காற்றும் வீசியது. பல குளங்கள், சமுத்திரங்கள் வான் கதவுகள் திறக்கப்பட்டு வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது. தென் பகுதி மக்கள் பலர் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு ஒக்டோபர் தொடக்கம் வடகிழக்குப் பகுதிகளில் வடகிழ் பருவப்பெயர்ச்சி மழை மிக அதிகளவில் கிடைக்கப்பெற்றதனால் பல குளங்கள் வான் பாய்ந்ததுடன், பல குளங்களின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இதனால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி ஏக்கர் கணக்கான வயல்கள் அழிவடைந்துள்ளன. இவ் இயற்கைப் பேரிடரால் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் வவுனியா, யாழ்ப்பாண மாவட்டங்களும் பாதிப்படைந்துள்ளன.

இரணைமடுக்குளம், பாவற்குளம் போன்ற பாரிய குளங்கள் வான் கதவுகள் திறக்கப்பட்டதால் முல்லைத்தீவு மாவட்டத்தின் தர்மபுரம், கண்டாவளை, முரசுமோட்டை போன்ற பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டன. வயல் நிலங்கள் முற்றாக அழிவடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இம் மாவட்டங்களின் கணிசமான மக்கள் தற்போதுவரை நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பல ஏக்கர் கணக்கான நெல் வயல்கள் அழிவடைந்தமையால் விவசாயிகள் பெரும் பாதிப்பினைச் சந்தித்துள்ளனர். அவர்களுக்கான இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படவில்லை. இது ஒருபுறமிருக்க, மீண்டும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள விடயம் கொவிட் தொற்று.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் கொவிட் தொற்று அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொவிட் தொற்றால் இதுவரை இருவர் உயிரிழந்துள்ளனர். வடபகுதியில் டெங்கு நோயின் தாக்கம் மிக வேகமாக அதிகரித்து வருகிறது. இதில் யாழ் மாவட்டம் முன்னிலையில் உள்ளது. தற்போது வரை யாழ் மவட்டத்தில் டெங்கு நோயினால் நால்வர் மரணமடைந்துள்ளதாகவும் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் சிகிச்சையில் உள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். இவ் நோய் தாக்கம் பரவ இவ்வாண்டு கிடைத்த அதிகளவிலான மழை வீழ்ச்சி காரணமாக அமைந்துள்ளதாக வைத்திய அதிகாரி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். அத்துடன் இவ்வாறான நோய்த் தாக்கத்திற்கு மக்களின் கவனக்குறைவும் காரணமாக அமைந்துள்ளது.

யாழ் மாவட்டம் சன நெருக்கடி, இட நெருக்கடி கூடிய மாவட்டம். இங்கு நுளம்புத்தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. மக்கள் இந் நிலைமைகளை பொறுப்புடன் அறிந்து நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு அவற்றை துப்பரவு செய்து, நுளம்புகளை அழிப்பதுடன் இந் நோய்த்தாக்கத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, சகல மக்களும் சுகாதாரத் தரப்புடன் இணைந்து செயற்படுவதுடன், உயிரிழப்புக்களை தடுக்கவும் முடியும். அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றொருபுறம் என மக்கள் பன்முகப் போராட்டங்களை இக்காலகட்டத்தில் சந்தித்து வருகின்றனர். எனவே மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு, எமக்கு வரும் அவலங்களை முறியடிக்க அனைவரும் ஓரணியில் இணைவோம்.

# கல்லறைப் பூக்கள்

26



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

அதுவரையும் அவனது கரங்களிலும் கோப்பிலும் மாறி மாறி உலாவும் ஒரு கடிதத்தினால், துரோகி பட்டம் சாட்டப்பட்டு, மாணவர்கள் மத்தியில் காதும் காதும் பேசின. இந்த அலுவலகத்தில் கடிதம் கொடுப்பதால் பெரிதாக சிக்கல் தோன்றாது. ஒன்றும் அறியாமல் - அப்பாவியாக - கடிதத்தைக் காட்டிக்கொண்டு திரிய, கடிதம் அவன் வசம் இல்லை என்பது ஓரளவுக்கு அவனைப் பாதுகாத்துவிட்டது.

கைகளில் வெள்ளைத் தாளுடன், அவனிடம் உதவியாக பேனை வாங்கிய அந்த பெண்மணியைத் தேடினான். அவனுடைய பேனையை வாங்குவதற்காக, அவளைக் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் எங்குமில்லை.

சிறிது நேரத்திற்கு முன்பு அவள் ஒரு பேனைக்காகத் தடுமாறிய காரணம் வேறு. இப்போது அவன் பேனைக்காகத் தடுமாறும் காரணம் வேறு. அன்று அவன், அவளை கரிசனையோடு - பரிதாபத்தோடு - பார்த்து உதவி புரிந்தான். இன்று அலுவலகத்தின் ஐயா, அவனை சந்தேகத்தோடு - பயத்தோடு - பார்த்து உதவி புரிந்தார்.

சாத்தின் பாதங்கள் தற்காலிக இருப்பிடம் நோக்கி நகர்ந்தது. வீதியில் சனக்கூட்டமும் இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் நடமாட்டங்கள் அதிகமாகவே இருந்தன.

சாத் வீதியில் நடக்க நடக்க மக்களும் அமளிதுமளி பட, இளைஞர்கள் இராணுவத்தினரிடம் மன்றாடினார்கள் இராணுவத்தினர் அவர்களைப் பிடித்து கவச வாகனங்களில் வலுக்கட்டாயமாக வற்புறுத்தி - நிர்ப்பந்தமாக - ஏற்றினார்கள். இளைஞர்களும் யுவதிகளும் ஆரவாரிக்கும் சப்தம் செவிப்பறைகளைக் கிழித்தது.

கடைகள் எல்லாம் இழுத்துப் பூட்டப்படுகின்றன. எல்லோரும் வீடுகள் நோக்கி ஓடுகின்றனர். இராணுவ வாகனங்களும் நோய் காவுகை வண்டிகளும் வீதியில் அலறிக்கொண்டு ஓடின.

திருக்கோணமலை புதிய ஊர் - சாத்துக்கு இருப்பிடம் போவதற்கு ஒரு பாதையைத் தவிர வேறு பாதைகள் தெரியாது. சாத், பலரை விசாரித்தபோதும், எல்லோரும் அவசர அவசரமாக மூச்சுத் திணற ஓடியமையால், அவனது கதையை ஒருவரும் பொருட்படுத்தவில்லை.

இருந்தும் வீதியின் எதிரே நடந்தான் கன தூரம் நடந்து விட்டான். நூறு மீற்றர் இடைவெளியில் இராணுவ கவச வாகனம் ஒன்று தலைகீழாக கவிழ்ந்து வீதியின் கரையில் கிடந்தது. இராணுவத்தினர் சிலர் உயிருக்குப் போராடிக்கொண்டும், பலர் பிணங்களாகவும் கிடந்தனர். வீதியின் கரையில் நின்ற இராணுவ வீரன் ஒருவன் (சற்று நல்லவன்) "ஏய் கொய்த யன்ன, ஐ.சி. கொடுங்க?" - AK47 இன் பின் பக்க பிடியால் சாத்தின் நெஞ்சில் இடித்தான்.

மிதிவெடியை மிதித்தவன் போல சாத் கிலி கொண்டு நின்றான். தேசிய ஆள் அடையாள அட்டையையும் பல்கலைக்கழக அனுமதிக் கடிதத்தையும் பார்த்த இராணுவ வீரன், "மல்லி அங்க கருங் கொட்டியா பாஞ்சிட்டுது. போம்பளைக் கரும் புலி. மே பாற யண்ட" என்றான்.

எங்கு வீதி மாற போகின்றோம் என்று தெரியாமல் சன நடமாட்டம் உள்ள உள் வட்ட வீதிக்கு மாற எத்தனிக்கும் வேளையில் கிழிந்து போன உரைப்பையில் ஐந்து கிலோகிராம் புழுங்கல் அரிசி சிதறிக் கிடந்தது. சிறிய சிறிய பொலித்தின் பைகளில் கட்டப்பட்டு, சீனி, பருப்பு, தேயிலை சோயா மீட், வெங்காயம், உள்ளி சிதறிக் கிடந்தன.

சற்று தூரத்தில் கிடந்த கோதுமை மா பைக்கற்றில் பொறிக்கப்பட்ட இசைக் கருவி அங்கு யாருக்கு கொடுக்கப்பட்ட பொதி கிடந்தது ஓரளவுக்கு ஊகித்துக் கொண்டான், சாத்.

இருந்தும் அவனுக்கு, அவளின் இடுப்பில் இருந்த குழந்தையை நினைத்தபோது, செல்வமலராக இருக்க மாட்டாள். ஏன் அவள் அப்படி செய்கின்றாள்? அவளைப் பார்க்கும் போது படித்த பெண்ணாகவல்லவா தெரிந்தாள். இருந்தும் சிதறிக் கிடந்த உலர் உணவு பொதி சற்று சந்தேகம் கொள்ள வைத்தது. குருட்டுத்தனமாக முடிவெடுக்காமல் செல்வமலர் விடயத்தைப் புறக்கணிக்காமல் சிந்தித்தவாறு வீதையைக் கடந்து சனக் கூடத்திற்குள் கலக்கிறான். உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்தான் இந்த கரும்புலித் தாக்குதல்.

மக்கள் பதற்றத்துடன், வீடுகளை நோக்கி ஓடுகின்றனர். அவன் பொறுப்பாளரும் செத்துப் போனான். யாரோ பெண்ணொன்று வந்து பாஞ்சு சிதறிப் போச்சாம். நிலாவெளி வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் விடிய பிள்ளையும் கையுமாகப் போனதாம். கட்சிக்காரங்கள் அவள் மீது இறக்கப்பட்டு ஏதோ பொதியொன்று கொடுத்தாங்கலாம். தூரத்தே அந்த கிழிந்து சாமான்கள் எல்லாம் கொட்டி கிடக்குதாம் என பலரும் பலவாறு கதைக்க கதைக்க சாத்தின் சந்தேகம் அதிகரித்துக்கொண்டே போனது. வீதி பதாதைகளை அவதானித்து சாத் இருப்பிடத்திற்கு செல்லும் வழியை ஊகித்துக் கொண்டான்.

செல்வமலருக்கு மட்டுமே தெரியும் தன்னுடைய கணவனைக் காட்டிக் கொடுத்தவனை. ஒரு சமயம் இராணுவம் அவளுடைய வீட்டுக்குக் கவச வாகனத்தில் சென்றபோது, கவச வாகனத்திற்குள் அந்த பொறுப்பாளர் உள்ளே இருந்ததை அவள் அன்றே கண்டுவிட்டாள். இதை யாரிடமும் அவள் கதைக்கவுமில்லை. அவளுடைய கணவனை விடுமாறு வாகனத்தில் இடி இடித்ததைப் போல அரற்றினாள். அன்று நினைத்தது இன்று கை கூடியுள்ளது செல்வ மலருக்கு.

முன்னொரு காலத்தில் இந்தியன் இராணுவத்தால், அவளுக்கு மூன்று வயது இருக்கும் போதே பெற்றோர், உறவினர்கள் எல்லோரையும் பலி



கொடுத்துவிட்டு, அனாதையாகி, தென்னிந்திய திருச்சபையில் தஞ்சம் புகுந்துஉயர்தரம்வரை கல்விகற்றவள். 'சூரியனைக் கண்ட பனிபோல' காதல் திருமணத்திற்குப் பின்னர் இவளது தனிமையின் கொடுமை மட்டும் விலகியிருந்தது. யாருக்கும் உரிமையுடன் ஒருவர் இருந்தால், எதற்கும் பயப்படத்தேவையில்லை - அவள் உணர்ந்திருக்க தவறவில்லை. அவளின் எதிர்பார்ப்புகள் எல்லாம் இப்போது 'விழலுக்கிறைத்த நீர்போல' வீணாகிவிட்டது.

சாத்துக்கு, கரும் புலித் தாக்குதலும் பொறுப்பாளரின் இறப்பும் செல்லமலரின் செயலும் அந்த பச்சைப் பாலகனின் சிரிப்பும் 'வாழ்க்கை விளக்குக்கு எண்ணெய் ஊற்ற எரிவது போல' அவனது இதயத்தில் துன்பம் பாய்ந்தது.

இயந்திர மயமான உலகத்தில் கரும் புலித் தாக்குதலால், ஒவ்வொரு மனிதனும் ஒருவர் முகத்தைப் பார்த்து கதைப்பதற்கு நேரமில்லாமல் மக்கள் எல்லோரும் நடப்பதும் ஓடுவதும் வாகனங்களில் போவதாகவும் உள்ளனர். ஒருவர் வீதியில் விழுந்து கிடந்தால் கூட உதவி செய்யாத நவீன உலகம்' அவ்வாறு எண்ணுவதில் தவறு இல்லை 'எந்த புற்றில் எந்த பாம்பு இருக்கும்' - யாருக்கும் தெரியாது. பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவன் ஒருவன்" தண்டைனையை அனுபவிப்பவன் இன்னொருவன் - உலக நியதியாகிவிட்டது.

சாத், 'அனுபவத்தின் அகல் விளக்காகிவிட்டான்' - செல்வமலரது விடயம் அந்தளவுக்கு அவனுக்குப் பாதிப்பை உண்டு பண்ணியது. அவனது கண்களுக்கு எட்டிய தூ ரத்தில் முன்னால், ஒரு பெண்மணி வலது தோளின் மேல் சிறிய பாலகனை சுமந்தவாறு இடதுத் தோளில் சிறிய இறப்பர் பையொன்றை சுமந்தவாறு 'பாரமேற்றின வண்டி போல' செல்கின்றாள். சாத் அவர்கள் இருவரையும் அடையாளங்கண்டு கொள்ள விரைவாக நடந்தான். அந்த பாலகனாக இருக்காது. செல்வமலர் அக்காவாக இருக்காது. (ஒரு நாள் சில வார்த்தைகளைக் கதைத்தாலும் அவள் மீது அவனுக்கு இனம் புரியாத கௌரவம் மலர்ந்தது) என்றெல்லாம் சிந்தித்தவன் அவள் அருகில் வந்து விட்டான்.

உன்னிப்பாக அவளது மேனியையும் முகத்தையும் அவதானித்தான். செல்வமலர் இல்லை என்பதைத் தனக்குள் தீர்க்கமாக முடிவு செய்து விட்டான். மீண்டும் அவளை ஒரு தடவை உற்று அவதானித்தான். நீள் பாவாடையும் கட்டைக் கை மேல் சட்டையும் அணிந்திருக்கிறாள். மெல்லிய மேனியை உடையவள். இரண்டு முழங்கைகளின் சிரட்டைகளும் கறுத்திருந்தன.

தொடரும்...

# ஜனாதிபதித் தேர்தலும், கட்சிகளின் வகிபாகமும் - வெற்றி யாருக்கு?






ஜனாதிபதித் தேர்தல் அரசியல் யாப்பின் படி எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் நடாத்தப்படவேண்டும். செப்டம்பர் அல்லது ஒக்டோபருக்குள் நடத்தப்படவேண்டும். ஆகவே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அடுத்த ஆண்டை ஒரு தேர்தல் ஆண்டாக பிரகடனப்படுத்தியிருப்பது நாங்கள் அனைவரும் அறிந்த விடயம்.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தல் என நான்கு தேர்தல்கள் வரிசை கட்டி நிற்கின்றது. இதில் ஜனாதிபதித் தேர்தலை முன் வையுங்கள் என்ற கருத்தும் அதற்கு முதல் பாராளுமன்றத்தைக் கலைத்து பாராளுமன்றத் தேர்தலை, பொதுத் தேர்தலை முன் வையுங்கள் என்ற கருத்தும் பலர் மத்தியில் இருந்து மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் முன்னுக்கு வைக்கப்பட வேண்டிய தேர்தலாக ஜனாதிபதித் தேர்தல் காணப்படுவதால், இந்த ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான காய்ச்சல் அதாவது சூடு காணப்படுவதால் அனைத்துக் கட்சிகளும் தற்போது உசாராக இருப்பதை நாங்கள் தற்போது அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

வழக்கமாகவே சில காலங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் போட்டியிடுபவர்கள் நான்கு அல்லது ஐந்து தரப்பினராக இருப்பார்கள். நான்கு அல்லது ஐந்து தரப்பிற்குக் கீழாக இருக்கும். சிலவேளைகளில் இருபதுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிட்ட காலமும் இலங்கையின் வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறது. அந்தவகையில் எதிர்வரும் காலங்களில் நடைபெறப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற நபர்களின் அட்டவணையைப் பார்ப்போமாகவிருந்தால் ஒன்றுக்கு ஒன்று கனதியான போட்டியை உண்டாக்குகின்ற நிலையினை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது அல்லது ஆய்வு மூலம் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது அல்லது ஊடகவியலாளர்களின் கணிப்பின் படி அறியக்கூடியதாகவிருக்கின்றது.



உதாரணமாக, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஒரு பொது வேட்பாளராகவோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியினுடைய வேட்பாளராகப் போட்டியிட இருக்கின்றார். தான் போட்டியிட இருப்பதாக அண்மையில் அமைச்சரவையில் கூறியது மாத்திரமல்ல, அமைச்சர்களை தனக்கு ஆதரவு நல்கும் படி கூறியிருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் மகாநாடுகளில் தான் போட்டியிடப்போவதாகக் கூறியிருப்பது இங்கே முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகக் கருதப்படுகின்றது.

இரண்டாவது, தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசா ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அவர் போட்டியிடுவார் என்பதற்கு திடகாத்திரமான அறிவிப்புக்கள் வந்திருக்கின்றன. அதேபோல ஜேவிபியினது தலைவர் அநுரகுமார திசாநாயக்கா போட்டியிடவிருக்கின்றார். இவர்களை நாங்கள் முன்னணி வேட்பாளர்களாக வைத்துக்கொள்வோமாக விருந்தால், இவர்களை ஒரு அட்டவணைப் படுத்துவதற்காகத் தான் நான் இவ்வாறு கூறுகின்றேனே தவிர, அவர்கள் முதன்மையானவர்கள், இவர்கள் இரண்டாம் தரம் மூன்றாம் தரமானவர்கள் என்பதற்காக அல்ல. ஒரு அட்டவணைப்படுத்துவதற்காக ஒரு நிரைப்படுத்துவதற்காக மாத்திரமே.

மேலே குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாசா, அநுரகுமார திசாநாயக்கா ஆகியோரை முதன் நிலை வேட்பாளர்களாகக் கருதினால் இரண்டாம் நிலை வேட்பாளர்களாக பாட்டாலி சம்பிக்க ரணவக்க நிற்பதாகத் தெரிகின்றது. சரத் பொன்சேகா, தொழிலதிபர் தம்மிக்க பெரேரா, முன்னாள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னாயக்க, அதேபோல முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னுடைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுடைய நிறைவேற்றுக் குழு தன்னை முன்மொழிந்தால் தானும் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்திருக்கிறார்.

அதேபோல பொதுஜன பெரமுனவில் நால்வர் இடம்பெறுகின்றனர். அதில் மிக முக்கியமானவராகக் கருதப்படுபவர் பசில் ராஜபக்ஷ. அவர் போட்டியிடலாம் அல்லது போட்டியிடாமல் விடலாம் என்கிற தெளிவான முடிவுகள் எடுக்கப்படாமல் விட்டாலும் தற்போது அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். அங்கு சென்று தனது பிரஜாவுரிமையை இரத்துச்செய்து வருவார் என்கிற வதந்தி பரவுகிறது. உண்மை நிலை தெரியவில்லை.



இதேநேரத்தில் கடந்த காலத்தைப் போலல்லாது தமிழ் மக்கள் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்தவேண்டும் என்கிற முன்மொழிவுகள் மிக வேகமாக வந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில் முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமாகிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தானாக முன்வந்து வடகிழக்கிலுள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் தன்னை முன்மொழிவார்களாகவிருந்தால் தான் ஒரு பொது வேட்பாளராகப் போட்டியிடுவேன் என்கின்ற அறிவிப்பை அவரும் வெளிப்படுத்தியுள்ளார்.

இன்னொரு பக்கத்தில் பார்த்தால் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அவர்களையும் ஒரு பொது வேட்பாளராக நிறுத்தப்படுகின்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என சிறி ரெலோ கட்சியினது தலைவர் உதயராஜாவும் கேட்டிருக்கின்றார். அந்தவகையில் இம்முறை நடைபெறப்போகின்ற ஜனாதிபதித் தேர்தல் என்பது களைகட்டிய தேர்தலாக இருக்கப்போகிறது என்பதற்கு மாற்றுக் கருத்தில்லை. இதில் யார் நாட்டினுடைய தலைவராக தெரிவுசெய்யப்படுவார் என்று சொல்கின்ற சங்கடமான கேள்விகள். ஏனென்றால் தேர்தலில் போட்டியிடப்போகின்ற வேட்பாளர்களாக நிற்கக்கூடியவர்கள் மிகுந்த பலம் கொண்டவர்களாகவும், பலத்த பின்னணி கொண்டவர்களாகவும் காணப்படுகின்ற காரணத்தினால். உதாரணமாக தொழிலதிபர் தம்மிக்க பெரேரா அவர்களை ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழியவேண்டும் என அவரது ஆதரவாளர்கள் கேட்டிருக்கின்றார்கள். அவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரைச் சந்தித்து உரையாடி வருகின்றார்.

இவ்வாறு பார்க்கின்றபோது பலத்த இதுவரை காலமும் நடைபெறாத இல்லாத ஒரு போட்டி நிலைமை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நடைபெறப்போகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்ற விடயமாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் நாங்கள் தனித் தனியாக ஒவ்வொரு கட்சிகளினுடைய நபர்களையும் ஆராய்ந்து பார்ப்பது அவசியமான விடயம். காரணம் மக்களுடைய மனங்களில் யார் இருக்கின்றார்கள். வாக்கு வங்கி யாருக்கு அதிகம் விழப்போகின்றது என்கிற கேள்விகளுக்கு உடனடியான பதில் வழங்க முடியாத காரணத்தினால் இதுவொரு பலத்த போட்டியாக இருக்குமென்று நான் கருதுகின்றேன்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அல்லது தமிழ் பிரதிநிதித்துவம் போட்டியிடுகின்றது என்பது முதலாவது தடவையல்ல. இரண்டு தடவைகள் ஏற்கனவே நடந்திருக்கின்றது. ஆனால் அந்த இரண்டு தடவைகளும் நாம் அடைந்த அனுபவம் பூச்சியமாகவே காணப்படுகின்றது.

உதாரணமாக 1982ஆம் ஆண்டு தமிழ்க் காங்கிரசினுடைய தலைவராகவிருந்த குமார் பொன்னம்பலம் அவர்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்களுக்கு எதிராகப் போட்டியிட்டு வடகிழக்கு மக்கள் அல்லது கொழும்பினைச் சேர்ந்த மக்கள் வாக்களித்து சுமார் ஒரு இலட்சத்து எழுபத்து மூவாயிரம் வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்தார். தேசிய உணர்வு தலைவிடத் தொடங்கிய காலம், தமிழ்த் தேசியம் தலைவிடத் தொடங்கிய காலம். 1977ஆம் ஆண்டுக்குப் பின்னரான 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வடகிழக்கு மக்கள் அவருக்கு அளித்த வாக்குகள் ஒரு இலட்சத்து மூவாயிரம். ஏனைய வாக்குகளை தேசியக் கட்சிகளில் போட்டியிட்டவர்களுக்கே தமிழ் மக்கள் அளித்திருந்தார்கள்.

இரண்டாவதாக, 2010 ஆம் ஆண்டு தமிழ் மக்களுடைய அபிலாசைகளையும் தமிழ் மக்களுடைய இழப்புக்களையும் சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டு ரீதியாகவும் முன்னிலைப்படுத்தவேண்டும், பகிரங்கப்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் இங்கு படுகின்ற துன்பங்களை உலகத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்கிற குறிக்கோளின் அடிப்படையில் எம். கே.சிவாஜிலிங்கம் அவர்கள் சுயேட்சையாகப் போட்டியிட்டார். அவ்வாறு போட்டியிட்டபோது வடகிழக்கில் இருக்கின்ற அல்லது வெளியில் இருக்கின்ற மக்கள் அவருக்கு வழங்கிய வாக்குகள் ஒன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்தி இரண்டு. அதனை வீதத்தில் கூறுவதானால் 0.09%. அவர் முன்வைத்த கருத்துக்கள் அதாவது இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்கள் படுகின்ற அவஸ்தைகள், கடந்த 60 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் படுகின்ற துன்பங்களை இந்த உலகம் அறிந்துகொள்ள வேண்டுமாகவிருந்தால் ஜனாதிபதித் தேர்தலில் தேசியக் கட்சிகளில் போட்டியிடுகின்றவர்களுக்கு எதிரான ஒரு அபிப்பிராயத்தை நாங்கள் உருவாக்கவேண்டும் என்று கூறப்படுகின்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் சிவாஜிலிங்கம் அவர்கள் போட்டியிட்டார். ஆனால் அதிலும் காரசாரமான விமர்சனங்கள், சாதகமான பாதகமான விமர்சனங்கள் இருக்கின்றது. அது ஒருபுறமிருக்க, ஆனால் அளித்த வாக்குகள் வெறும் ஒன்பதாயிரம்.

இந்தமாதிரியான ஒரு சூழலில் இலங்கையின் அரசியல் யாப்பின் படி, இலங்கையில் தயாரிக்கப்பட்ட 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் படி அல்லது 1972ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசியல் யாப்பின் படி தமிழர் ஒருவர் அல்லது சிறுபான்மையைச் சேர்ந்த ஒருவர் இந்த நாட்டினுடைய ஜனாதிபதியாக கிட்டவும் எண்ணமுடியாத நிலை என்பது இன்று எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இந்த அரசியலில் பேரம் பேசுகின்ற விடயமும் பச்சைக் கனவாகவே இருக்கிறது. ஆகையால் திரு.விக்னேஸ்வரன் தானாக முன்வந்து தானாக கூறுகின்ற விடயமும், மனோ கணேசன் அவர்கள் பொது வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் எனக் கூறுகின்ற விடயமும் இருவேறு விடயங்கள். இவற்றை வேறு வேறாகப் பார்க்கவேண்டும். மனோ கணேசனைப் பொறுத்தவரை மலையகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் வடகிழக்கு மக்களது அபிலாசைகளையும் அவர்களது துன்ப துயரங்களையும் நன்றாக அறிந்தவர். துணிந்தவர், ஆளுமை மிக்கவர், ஆற்றல் மிக்கவர். அவரை நாங்கள் ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டாலும் கூட, ஏனையவர்களை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு எங்களுடைய அரசியல் சூழ்நிலையும் வாக்குரிமைச் சூழ்நிலையும் இல்லை என்பதனால், தமிழ் மக்கள் சார்பில் யாராவது போட்டியிட்டு எதையாவது சாதிக்க முடியுமா? எதையாவது கொண்டு வர முடியுமா? எதையாவது முன்னுரிமைப்படுத்த முடியுமா? என்று நாங்கள் நோக்குவோமாகவிருந்தால், அது வெறும் பூச்சியக் கனவாகவே இருக்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.

**திருமலை நவம்**

# மயிலத்தமடு மேய்ச்சல் தரை பிரச்சினை – அரசாங்கத்துக்கும் ஆட்சிமுறைக்கும் அமிலப்பரீட்சை

கிழக்கு மாகாணத்தில் மேய்ச்சல் தரையாக அமைச்சரவையினால் 2011ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட மயிலத்தமடு – மாதவனை நிலங்கள் மீது தங்களுக்கு இருக்கும் உரிமைக்காக சித்தாண்டியில் கால்நடை வளர்ப்பாளர்களான தமிழர்கள் நடத்திவரும் அமைதிவழிப் போராட்டம் மூன்று மாதங்களையும் கடந்து நீடிக்கிறது.

தொடரும் நில அபகரிப்பு காரணமாக எண்பதுக்கும் அதிகமான கால்நடைகள் களவாடப்பட்டிருக்கின்றன அல்லது கொல்லப்பட்டிருக்கின்றன. அது தொடர்பில் உருப்படியான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் குவிந்துகிடக்கின்றன. சில முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கு பொலிஸார் மறுக்கிறார்கள். இதுவே மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை நெருக்கடியின் கதையின் சுருக்கமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக 2023 அக்டோபர் 7ஆம் திகதி அளவில் இரு பொலிஸ் காவல் நிலைகள் அமைக்கப்பட்ட பின்னரும் கூட இந்த அநீதியான நிலவரம் தொடர்கிறது. செங்கலடியில் உள்ள மக்களுக்கு நீதி வழங்குவதாக 2023 அக்டோபர் 8 ஜனாதிபதி அறிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துமீறி நிலத்தை அபகரித்தவர்களில் 13 பேரை அப்புறப்படுத்துமாறு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் 2013 நவம்பரில் உத்தரவிட்டது. அத்துமீறல்காரர்களை வெளியேற்றுவதாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை 2022 ஜூலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளித்தது. ஆனால், எதுவும் நடக்கவில்லை.

இது ஆட்சிமுறையினதும் நிர்வாகத்தினதும் அலட்சியத்தை அல்லது தகுதியின்மையை அல்லது சிறுபான்மையினத்தவர்களுக்கான நீதியை மலினப்படுத்தும் அதன் கொள்கையையே வெளிக்காட்டுகிறது.

போரின்போது மரணமடைந்தவர்களை நினைவுகூர்ந்த மக்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதில் பொலிஸார் இறங்கியிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளை, தனிநாட்டை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர்களும் அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பேசுகிறார்கள். ஆனால், அந்த மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுக்க எவரும் இல்லை.

மாவட்டத்துக்கு வெளியில் உள்ளவர்கள் தங்களது நிலங்களை அபகரிப்பதற்கு வரமுடியாமல் இருந்த காலப்பகுதியை இந்த மக்கள் ஒரு பொற்காலம் என்று அந்த மக்கள் தொடர்ந்தும் நினைப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? நிலங்களை அபகரித்து கால்நடைகளை கொலை செய்கின்றவர்களிடம் இருந்து இந்த மக்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்கவில்லை. பாதுகாப்பை வழங்கவேண்டிய அதன் கடமையை அரசாங்கம் வேண்டுமென்றே உதாசீனம் செய்கிறது.

பயிர்ச்செய்கை நிலங்களில் மேய்வதற்கு கால்நடைகளை அனுப்பக்கூடாது என்றும் அவ்வாறு செய்யத் தவறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உத்தரவிடும் மாவட்ட அதிகாரிகள் (அரசாங்க அதிபர் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் போன்றோர்) உண்மையில் தற்போது அங்கு என்ன நடக்கிறது என்பதை வசதியாக அலட்சியம் செய்கிறார்கள் போன்று தோன்றுகிறது.

அதேவேளை, தற்போது மேய்ச்சலுக்கு என்று சட்டபூர்வமாக ஒதுக்கப்பட்ட இடங்களில் அத்துமீறிப் பிரவேசித்ததாக விவசாயிகளுக்கு எதிராக வனத் திணைக்களம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறது.

இன்னொருவனத்திணைக்கள அதிகாரி இந்த நிலங்கள் எல்லாம் மகாவலிக்குச் சொந்தமானவை என்றும் அவற்றின் மீது தங்களுக்கு எந்த நியாயாதிக்கமும் கிடையாது என்றும் அறிவித்திருக்கிறார். சொல்லும் செயலும் வேறாக இருக்கும் இத்தகைய குழப்பகரமான சூழ்நிலையில் கால்நடை வளர்ப்பாளர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் வாழ்க்கை பெரும் அவலத்துக்குள்ளாகியிருக்கிறது. அதேவேளை, இந்தப் பகுதியில் எதுவும் நடக்காதது போல நாட்டின் ஏனைய பாகங்களில் மக்கள் எந்த அக்கறையும் இன்றி இருக்கிறார்கள்.



தேசிய நல்லிணக்கத்தின் முக்கியத்துவம் குறித்தும் அதில் அரசாங்கத்தின் பற்றுறுதி குறித்தும் ஐக்கிய நாடுகள், பிரிட்டிஷ் நாடாளுமன்றம், இலங்கை நாடாளுமன்றம் மற்றும் பல இடங்களிலும் இனிப்பாக பேசப்படுகிறது. ஆனால், அடிமட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவரும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

நீதித்துறை (மாஜிஸ்திரேட் நீதிமன்றம், மேல் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம்) தீர்ப்புகளை வழங்குவதுடனும் உத்தரவுகளை பிறப்பிப்பதுடனும் நின்றுகொள்கிறது. ஆனால், சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் நீதித்துறையைக் கடந்து சென்றுவிடுகிறது போன்று தெரிகிறது.

இத்தகைய பின்புலத்தில், பரவலாக கிளப்பப்படும் முக்கியமான ஒரு கேள்வி "அவர்கள் இந்த நாட்டுக் குடிமக்களா?"

ஒருவரை எது ஒரு குடிமகனாக்குகிறது? 'மக்களின் அதிகாரம் தான் அரசிடம் ஒப்படைக்கப்படுகிறது' என்று அரசியலமைப்பு தெளிவாகக் கூறுகிறது. ஆனால், மக்களைப் பொறுத்தவரை அரசு எங்கே இருக்கிறது? மட்டக்களப்பின் இந்த கால்நடை வளர்ப்பாளர்களின் அவலத்துக்கு அரசே பொறுப்பு. அரசின் 'ராடருக்குள்' அவர்கள் இல்லை என்றே தெரிகிறது. இந்த மக்களின் உயிர்களும் சக்தியும் நம்பிக்கையும் போகும்போது அவர்கள் என்ன ஒரு பெரிய எடுப்பிலான இறுதிச் சடங்கிற்காகவா காத்திருக்கிறார்கள்?

காணாமல்போனவர்கள் பற்றி எதுவும் பேசப்படுவதாக இல்லை. பல தசாப்தங்கள் கடந்துவிட்டன. காணாமல் போனவர்களின் உறவினர்களின் போராட்டம் தொடர்கிறது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் விவகாரம் கமிட்டிகள், ஆணைக்குழுக்களில் தொடர்கிறது. அதற்கும் ஒரு நாள் காணாமல்போனவர்களின் கதியே நேரும்.

தங்களது வாழ்நாளில் நாட்டுப்பிரிவினையை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று கூறிய அமைச்சர்கள் எங்கே போய்விட்டார்கள்? ஏற்கெனவே பிரிவினை இடம்பெற்றுவிட்டது.

பிரிவினை என்பது பௌதீக ரீதியான நிலப்பிரிவினை அல்ல. மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் அலட்சியப்படுத்தப்படுவதில் பிரிவினை நடைமுறையில் இருக்கிறது. விவாகரத்து என்பது கணவனையும் மனைவியையும் வெவ்வேறு வீடுகளில் வாழச் செய்வதல்ல. ஒரே வீட்டில் ஒரே அறையில் இருந்தாலும் கூட அவர்கள் பிரிந்து வாழமுடியும்.

இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் குடியுரிமை பறிப்பு, 1956 தனிச்சிங்களச் சட்டம், பிறகு பல வருடங்கள் கடந்து பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் மற்றும் பதவி நியமனங்கள் உட்பட பல பாகுபாடான நடவடிக்கைகள் மூலமாக சுதந்திரம் பெற்ற நாளில் இருந்தே நாட்டில் விவாகரத்து இடம்பெற்றுவிட்டது.

நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி என்ற அடிப்படையில் அரசியலமைப்புப் பேரவைக்கு பொருத்தமான உறுப்பினரின் பெயரை அறிவித்த போதிலும் கூட அந்த நியமனம் இன்னமும் செய்யப்படவில்லை.

மாகாண சபை தேர்தல்களுக்கு என்ன அவசரம் என்று ஜனாதிபதி கேட்கிறார். ஆட்சிமுறையின் பாகுபாடான நடவடிக்கைகளின் விளைவான வேதனைக்குப் பிறகு வகுக்கப்பட்ட ஒரு ஏற்பாடே மாகாண சபைகள் என்பதை விளங்காதவராக அவர் பேசுகிறார்.

நாட்டில் என்ன பிரச்சினை என்றும் அவர்கள் கேட்கிறார்கள். நாடாளுமன்றத்துக்கு அது தெரியவில்லைப் போலும். மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள் இருக்கிறதா என்றும் கேள்வி கிளம்புகிறது. வாழ்க்கை வழமை போன்று இருப்பதாகவே ஒரு தோற்றப்பாடு காட்டப்படுகிறது. டுபாய்க்கு பறந்து ஆகாயத்தில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

அதேவேளை பட்டினி கிடக்கும் மக்களின் தொகை அதிகரித்த வண்ணமே இருப்பதாக சர்வதேச அறிக்கைகள் கூறுகின்றன. விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்கள், உற்பத்தியாளர்கள் பல்வேறு இடர்பாடுளை எதிர்நோக்குகிறார்கள். பங்கீடுகளை விநியோகித்து திருப்திப்படுத்துவதற்கு அப்பால் அவர்களின் பிரச்சினை சென்றுவிட்டது.

மயிலத்தமடு – மாதவனைப் பிரச்சினை மேய்ச்சல் தரையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை மாத்திரமல்ல. அது ஆட்சிமுறை, மக்களின் உரிமைகள் (குறிப்பாக சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகள்), சமூகத்தில் சமத்துவத்தைப் பேணுவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் விருப்பம் மற்றும் ஆற்றலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையுமாகும்.

மக்களுக்கு நீதியையும் சமத்துவத்தையும் உறுதி செய்யக்கூடியதாக தீர்வுகளைக் காணக்கூடிய பிரச்சினைகளைக் கையாளுவதில் ஜனநாயகத்தின் தூண்களுக்கு (நீதித்துறை, நிறைவேற்று அதிகாரபீடம், சட்டவாக்க சபை) இருக்கக்கூடிய ஆற்றல் துரதிஷ்டவசமாக நாளாந்தம் அருகிக்கொண்டே போகிறது போன்றே தெரிகிறது.

**பேராசிரியர் ஜெயசிங்கம்**
**கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்**

# தமிழரசுக் கட்சி உடையுமா? - நிலாந்தன்



தமிழரசுக் கட்சியின் தலைவர் யார் என்பதை தெரிவு செய்வதற்கு வரும் ஜனவரி மாதம் தேர்தல் நடக்கவிருக்கிறது. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி அது. அக்கட்சித் தலைவரை இதுவரை காலமும் தேர்தல் இன்றி ஏகமனதாக தெரிவு செய்து வந்தார்கள். அதாவது போட்டிக்கு ஆள் இருக்கவில்லை. ஆனால் இம்முறை போட்டி ஏற்பட்டிருக்கிறது. இப்போட்டிக்குக் காரணம் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அந்த பதவியை அடைய விரும்புவதுதான்.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் பட்டத்து இளவரசர் போல சுமந்திரனே தோன்றினார். அதை நோக்கி அவர் தன்னை வளர்த்துக் கொண்டார். உள்ளூராட்சி சபை. மாகாண சபை போன்ற எல்லா மட்டங்களிலும் அவர் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பெருக்கிக் கொண்டார். அதற்கு முது தலைவராக இருந்த சம்பந்தரின் ஆசிர்வாதமும் இருந்தது. அதாவது பல ஆண்டுகளாகத் தலைமைப் பதவியை இலக்கு வைத்து திட்டமிட்டு உழைத்தவர் சுமந்திரன். அவரிடமிருந்த மொழிப்புலமை. சட்டப் புலமை. நிதிப்பலம் போன்றவை காரணமாக அவர் திட்டமிட்டுத் தன்னுடைய நிலையை பலப்படுத்தி வந்தார். சிறீதரன் அவருக்கு சவாலாக எழாதவரை அவர்தான் ஏகமனதாக தெரிவு செய்யப்படவேண்டிய ஒரு தலைவர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது சிறீதரனும் அவரும் இணைந்து செயல்பட்டார்கள். சிறீதரன் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். அது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியது.

கட்சிக்குள் சுமந்திரனின் எழுச்சி என்பது கடந்த 14 ஆண்டுகளிலும் படிப்படியாக திட்டமிட்டு கட்டியெழுப்பப்பட்ட ஒன்று. சம்பந்தர் அதைத் தொடங்கி வைத்தார். கட்சியை தீவிரவாத நீக்கம் செய்யவேண்டும். சிங்கள மக்களின் நன்மதிப்பை வென்றெடுக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து சம்பந்தர் உள்ளே கொண்டுவந்தவர்தான்சுமந்திரன். ஆயுதப் போராட்டமானது சிங்கள மக்களைப் பகை நிலைக்குத் தள்ளி விட்டது என்று சம்பந்தர் கருதினார். ஒரு தீர்வை பெறுவதாக இருந்தால் சிங்கள மக்களின் ஒப்புதல் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கு கொழும்பை மையமாகக் கொண்ட மொழியாளுமை கொண்ட சுமந்திரனைப் போன்றவர்கள் விக்னேஸ்வரனைப் போன்றவர்கள் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சுமந்திரன். விக்னேஸ்வரன் போன்றவர்களை சம்பந்தர் கட்சிக்குள் இறக்கியமை என்பது தற்செயலானது அல்ல. அவரிடம் அதற்கென்று தெளிவான ஒரு வழிவரைபடம் இருந்தது. அதன்படியே காரியங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனால்தான் சுமந்திரன் பட்டத்து இளவரசராக மேல் எழுந்தார்.

ஆனால் சம்பந்தரின் வழி தோற்றுவிட்டது. அவர் எதிர்பார்த்ததுபோல ஒரு தீர்வைப் பெற முடியவில்லை. அதுமட்டுமல்ல. அவர் உள்ளே இறக்கிய விக்னேஸ்வரன் அவருக்கு எதிராகத் திரும்பினார். அதன்பின் இறக்கப்பட்ட குகதாசன் எதிராகத் திரும்பிவிட்டார். சுமந்திரன் சாணக்கியர் கூறியது போல "நண்டாக" மாறிவிட்டார். "இளவரசர்கள் நண்டுகளைப் போன்றவர்கள். அவர்கள் தகப்பனைத் தின்னிகள்" என்று சாணக்கியர் கூறுவார். மொத்தத்தில் சம்பந்தர் ஒரு தோல்வியுற்ற தலைவராக ஓய்வு பெறப் போகின்றாரா?.

ஆனால் அவர் தமிழ் அரசியலைச் சீரழித்துவிட்டார். கடந்த 14 ஆண்டுகளில் அவரால் உருப்படியான ஒரு தீர்வை பெற்றுத்தர முடியவில்லை. கூட்டமைப்பு என்ற ஐக்கிய கட்டமைப்பையும் பாதுகாக்க முடியவில்லை. அவருடைய வாரிசுகளே அவரைத் தூக்கி எறியும் ஒரு நிலை. அவர் கடந்த 14 ஆண்டுகளாக திட்டமிட்டு முன்னெடுத்த அரசியல் வழியின் விளைவாக அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளேயே சிதைவுகள் தொடங்கிவிட்டன.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறீதரன் சுமந்திரனின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்தார். அதனால்தான் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். ஆயின் இப்பொழுது சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையே ஏற்பட்டிருப்பது தனிப்பட்ட முரண்பாடா? அல்லது. கொள்கை முரண்பாடா? கூட்டமைப்புத் தேய்ந்து தமிழரசுக் கட்சியாகியதற்கு சுமந்திரனையே பலரும் குற்றஞ்சாட்டு வதுண்டு. சிறீதரனின் செல்வாக்கு அடித்தளமாக காணப்படும் கிளிநொச்சிக்குள் சுமந்திரன் தனக்கு ஆதரவான ஒரு சிறு அணியை உருவாக்கி வைத்திருக்கிறார். ஏற்கனவே சிறீதரனோடு இருந்தவர்கள் அவர்கள். சிறீதரனின் கோட்டைக்குள் சுமந்திரன் ஊடுருவ முற்பட்டமையும். முரண்பாடுகள் தீவிரமடைய ஒரு காரணம்.

முதலில் இருவருக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகளை பார்க்கலாம். சுமந்திரன் புரட்டஸ்தாந்து பாரம்பரியத்தில் வந்தவர். கொழும்புமைய வாழ்க்கைக்கு அதிகம் பழக்கப்பட்டவர். கொழும்புமைய உறவுகளைக் கொண்டவர். ஒரு தமிழ் மக்களின் பிரதிநிதியாக கொழும்பில் தன் செல்வாக்கை மேலும் பலப்படுத்திக் கொண்டவர். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஓர் ஊடக முதலாளி ஒருமுறை சொன்னார் "தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வருகிறார். அதேசமயம் தென்னிலங்கையில் அவர் அரசியல் உயர் குழாம். படைத்துறை உயர் குழாம். புத்திஜீவிகள். ஊடகங்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராக வளர்ந்திருக்கிறார். தென்னிலங்கை அரசியலில் அதிகம் செல்வாக்கு மிக்க ஒரு தமிழ் அரசியல்வாதி அவர்தான். தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் கொழும்பில் ஒரு பிரமுகராக வலம் வருகிறார்" என்று. தனது மொழிப்புலமை. வாழ்க்கைப் பின்னணி காரணமாக சுமந்திரன் தென்னிலங்கையில் மட்டுமல்ல. உலக அளவில் ராஜதந்திரிகள் மத்தியிலும் ராஜதந்திர வட்டாரங்களிலும் அதிகம் தெரியவந்த ஒருவராகக் காணப்படுகிறார்.

இப்பொழுது சிறீதரனைப் பார்க்கலாம். அவருடைய வேர் தீவுகளில் இருக்கிறது. அவர் தன்னைப் பலப்படுத்திக்கொண்டது கிளிநொச்சியில். போராட்டப் பாரம்பரியத்தில் வந்தவர். அதிகம் உள்ளூர் பண்புடையவர். உள்ளூர் உணர்வுகளை அதிகம் பிரதிபலிப்பவர். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னரான ஒரு காலகட்டத்தில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர் என்ற அடிப்படையில் அவருடைய பாரம்பரியம் அவருடைய வாழ்க்கைமுறை போன்றன சுமந்திரனிடமிருந்து வேறுபாடானவை. இந்த வேறுபாடுகளை சிறீதரனை ஆதரிப்பவர்கள் கொள்கை வேறுபாடுகளாக வியாக்கியானம் செய்கிறார்கள். சுமந்திரனின் அணுகுமுறை அதிகம் மிதவாதத் தன்மைமிக்கது இணங்கிச் செல்லும் தன்மை மிக்கது. அதனை அவருடைய கொழும்புமைய நிலையான நலன்கள் பெருமளவுக்குத் தீர்மானிக்கின்றன. ஆனால் சிறிதரனின் அணுகுமுறை அதிகம் எதிர்ப்புத்தன்மைமிக்கது. ஒப்பீட்டளவில் சுமந்திரனை விடத் தீவிரமானது.

எதுவாயினும் ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால். அதாவது தேர்தலை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றால். தேர்தலில் இருவருக்கும் இடையிலான முரண்பாடு கொள்கை முரண்பாடாகவே காட்டப்படும். சில சமயம் அது பிரதேச வாதமாகவோ அல்லது மத வாதமாகவோ மாறக்கூடிய ஆபத்துகளும் உண்டு. அதை ஒரு கொள்கை வேறுபாடாக காட்டுவது சிறீதரனுக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக இருக்கும். அனுகூலமாகவும் இருக்கும். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கும் கொழும்பு மைய தமிழ் நிலைப்பாட்டுக்கும் இடையிலான ஒரு மோதலாக அதை உருவகித்தால் தனக்கு அதிகரித்த ஆதரவு கிடைக்கலாம் என்று அவர் நம்பக்கூடும். அதாவது கொள்கை அடிப்படையில் தன் பக்கம் பலமாக உள்ளது என்று அவர் நம்பக்கூடும்.

ஆனால். கடந்த 14 ஆண்டுகளிலும் அப்படியெல்லாம் கொள்கை வழியில் கட்சிகள் கட்டி யெழுப்பப்பட்டனவா? தமிழ் மக்கள் கொள்கைகளுக்கு வாக்களிக்கிறார்கள் என்பது ஒரு "டெம்ப்லட்" வகை வசனமாக மாறி வருகிறதா? ஏனெனில் தமிழ் அரசியல்வாதிகள் தமது விசுவாசிகள் கூட்டத்தை கொள்கை அடிப்படையில் கட்டியெழுப்பியதை விட அதிகமாக எதிர்கால நலன்களின் அடிப்படையில்தான் கட்டியெழுப்பி வைத்திருக்கிறார்கள்.

எந்த நாடாளுமன்ற உறுப்பினரோடு நின்றால் தனக்கு உள்ளூராட்சி சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது மாகாண சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது நாடாளுமன்றத்தில் ஆசனம் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்தே பெரும்பாலான தொண்டர்கள் தலைவர்களைச் சூழ்ந்து காணப்படுகிறார்கள். அதாவது தேர்தல் மைய நோக்குநிலையில் இருந்துசிந்தித்தே பெரும்பாலான கட்சி வலைப்பின்னல்கள் கட்டி யெழுப்பப்பட்டுள்ளன. யாரோடு நின்றால் கட்சிக்குள் தங்களுடைய அடுத்தடுத்த கட்டப் பதவி உயர்வுகளைப் பாதுகாக்கலாம் என்றுதான் பெரும்பாலான கட்சித் தொண்டர்கள் சிந்திக்கிறார்கள். கொள்கைகளால் உருகிப் பிணைந்த ஒரு கட்டமைப்பாக கட்சி இருந்திருந்தால் கட்சிக்குள் உடைவு வரும்பொழுது அதை நாகரிகமாக கடந்து போக தெரிந்திருக்கும். சமூக வலைத்தளங்களில் நிகழும் மோதல்களில் தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் குறைந்தபட்ச அரசியல் நாகரீகமாவது பேணப்பட்டு இருந்திருக்கும்.

ஆனால் அதைக் காணவில்லை. இது தமிழரசு கட்சிக்குள் மட்டும் நடக்கவில்லை. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குள்ளும் நடந்தது. மணிவண்ணன் பிரிந்தபோது அதைக் காண முடிந்தது. நேற்றைய தோழன் இன்றைய துரோகி. இவ்வாறு முன்னாள் தோழர்களை இந்நாள் துரோகிகளாக்கும் அரசியல் பண்பாடு புதியது அல்ல. இது தமிழ் ஆயுத அரசியலில் இருந்து மிதவாத அரசியல் வரை உண்டு.

ஏற்கனவே பல தசாப்தங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் கொங்ரசுக்கும் இடையே மோதல்களின்போது. இரு கட்சி ஆதரவாளர்களும் மல முட்டிகளை பயன்படுத்துவார்கள். அதாவது மண் முட்டிகளுக்குள் மலத்தை நிரப்பிக்கொண்டு வந்து எதிராளியின் வீட்டு முற்றத்தில் உடைத்துவிட்டுப் போவார்கள். அதே மலமுட்டிப் பாரம்பரியம் இப்பொழுது சமூக வலைத்தளங்களுக்கும் வந்துவிட்டது. முன்புகட்சிகளுக்குஇடையேஅதுஇருந்தது. இப்பொழுது கட்சிகளுக்குள்ளேயே வந்துவிட்டது. அது தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் ஒர் அரசியல் பண்பாடு அல்ல. கொள்கைப் பற்றுறுதி இருந்தால் அப்படியெல்லாம் பொது வெளியில் விமர்சனங்கள் வராது. தமிழ்க் கட்சிகளின் விசுவாசக் கட்டமைப்புக்கள் பெருமளவுக்கு கொள்கையை விடவும் எதிர்காலப் பதவி உயர்வுகளை மையமாகக்கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டவைதான்.

இப்படிப்பட்டதோர் அரசியற் சூழலில் தமிழரசுக் கட்சிக்குள். தலைவருக்கான ஒரு தேர்தல் நடந்தால். அது தமிழரசியலின் ஜனநாயகச் செழிப்பை நிரூபிக்குமா? அல்லது தேசத் திரட்சியை உடைக்குமா? தேர்தலில் யார் வென்றாலும் குறிப்பாகக் கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சிக்குள் உடைவு ஏற்படுமா?

# இலக்கு என்றால் என்ன?



நமது ஒவ்வொரு எண்ணமும் ஒரு செயலைக் குறிக்கும். ஒவ்வொரு செயலும் ஓர் இலக்கைக் குறிக்கும். ஒவ்வொரு இலக்கும் ஒரு வெற்றியைக் குறிக்கும்.

இலக்கில்லா வாழ்க்கை என்பது அச்சாணி இல்லாத வண்டிக்குச் சமம். நாம் எப்போதும் இலக்கை நிர்ணயிக்கும் போதும் நடைமுறைக்குச் சாத்தியமான. அடையக்கூடிய இலக்கை நிர்ணயித்தல் வேண்டும்.

இலக்குகளை நிர்ணயிப்பது என்பது ஒரு கலை. ஒவ்வொரு தனி மனிதரும். நிறுவனமும். அமைப்பும். நாடும் இதனைக் கற்றுக் கொள்வது மிகமிக அவசியமானதாகும்.

வாழ்க்கையில் வெற்றிச் சிகரத்தைத் தொடுபவர்களுக்கும். மற்றவர்களுக்கும் ஒரே வித்தியாசம்தான். வெற்றியைத் தனதாக்கியவர்கள் இலக்கை நோக்கிப் பயணிக்கின்றனர். மற்றவர்கள் இலக்கில்லாமல் அலைகின்றனர்.

இந்த உலகில் மனிதர்கள் அவர்களது வாழ்க்கையில் முன்னேறுவதற்கென்று நிறைய இலக்குகள் உள்ளன. இலக்குகளை முழுமைப்படுத்த நிறைய கனவுகள் உண்டு.

இலக்குகளுடன் பயணிக்கும் போது தான் வாழ்க்கை இனிமையானதாகவும். சுவாரசியமானதாகவும் இருக்கும். இலக்கு இல்லாமல் பயணிக்கும் போது வாழ்வில் வெறுமை வந்துவிடும்.

**இலக்கு என்றால் என்ன?**

இலக்கு என்பது ஒரு நோக்கம் கொண்ட முடிவின் பிரதிபலிப்பாகும். இலக்கு என்பது முயற்சியுடனும் வரையறையுடனும் எதிர்காலத்தில் அடைந்து கொள்ளக்கூடிய ஒரு உறுதியான விடயமாகும்.

அதாவது ஒரு இலக்கு என்பது நீண்ட கால இடைவெளியில். பொதுவாக மூன்று முதல் ஐந்து வருடங்களில் அடைந்து கொள்ளவேண்டிய முடிவுகள் ஆகும்.

**இலக்கின் வகைகள்**

இலக்கினை மூன்றாக வகைப்படுத்தலாம். அதாவது.

குறுகிய கால இலக்கு 6 மாதம் - 1 வருடம்
மத்திய கால இலக்கு 1 வருடம் - 3 வருடம்
நீண்ட கால இலக்கு 3 வருடம் - 5 வருடம்

**இலக்கின் முக்கியத்துவம்**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் இலக்கு என்பது அவசியமானதாகும். இலக்கு இல்லாத மனிதன் மாலுமி இல்லாத படகு போல் தத்தளிப்பான்.

மனிதன் நிர்ணயிக்கும் இலக்கு தான் பிற்காலத்தில் அவன் வாழ்க்கையையே நிர்ணயிக்கும். இலக்குகளே நம் எதிர்கால வாழ்வைச் சிறப்பாக்குகின்றன.

இலக்குகள் நம்முடைய எதிர்கால நலன்களுக்கு நாம் செய்யும் வாக்குறுதிகள் போன்று இருக்கின்றன.

குறுகிய கால இலக்குகளை பூர்த்தி செய்வதன் மூலம்தான் நீண்டகால இலக்கினை அடைய முடியும்.

வாழ்வின் கனவுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இலக்குகளை நிர்ணயித்தே செயற்பட வேண்டும். அப்போது தான் கனவுகளை நனவாக்க முடியும்.

**இலக்குகளை அடைவதற்கான வழிகள்**

இலக்கைத் தேர்வு செய்வதிலும். தேர்வு செய்த இலக்கை அடைவதிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். எப்பொழுதும் இலக்குகள் பெரிதாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

உங்கள் சக்திக்குத் தகுந்தாற் போலவும். பொருளாதார வசதிக்கு ஏற்றதாகவும் இலக்குகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நிர்ணயித்த இலக்கை ஒரு நேர்கோட்டுப் புத்தகத்தில் தெளிவாக எழுத வேண்டும். அதனை அடிக்கடி படித்து மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

எப்போதும் திட்டமிடல் என்பது மிகவும் அவசியமானதாகும். இலக்குகளைத் திட்டமிடும் போது இலக்குகளை அடைய வகுக்கும் திட்டங்கள் சிறிதாக இருக்கும் படியும். எளிதில் செயற்படுத்தக்கூடிய வகையிலும் வகுத்துக் கொள்ளவேண்டும்.

இலக்குகளை அடையும் முயற்சியில் நாள்தோறும் பல சவால்களைச் சந்திக்க வேண்டி ஏற்படும். அப்போது சோர்ந்து விடக்கூடாது.

விடா முயற்சியுடன் பயணிக்க வேண்டும். சவால்களை எதிர்கொள்வதற்கான மனத் தைரியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**மாவிலாறு மகிந்தவும்**
**முள்ளிவாய்க்கால் பிரபாகரனும்**
**- நடந்தது என்ன?**

என்கிற தொடர் கட்டுரை அடுத்த வார இதழில் வெளியாகும்.

# VAT வரி அதிகரிப்பால் ஏற்படும் தாக்கம்

"பெறுமதி சேர் வரி (VAT) திருத்தச் சட்டம் மற்றும் அதன் தாக்கம்" என்ற தலைப்பில் (28) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் ஏயுவு விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி அது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் 20 வருடங்கள் கடந்துள்ளன. ஆரம்ப கட்டத்தில், VAT இரண்டு விகிதங்களாக இருந்தது. ஆனால் பின்னர் அது மூன்று விகிதங்களாக திருத்தப்பட்டன. இவ்வகையில், அவ்வப்போதுவெவ்வேறுமதிப்புகளில் இருந்த இந்த VAT வரி விகிதம், 2019 இல் செய்யப்பட்ட வரித் திருத்தங்களால் 8% ஆகக் குறைக்கப்பட்டது. இதனால் அரச வருமானம் பெருமளவு குறைந்துள்ளது. பின்னர் அது 15% ஆக உயர்த்தப்பட்டது.

கடந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட VAT வரி திருத்தச் சட்டம் மூலம், 2024 ஜனவரி 01 முதல் VAT விகிதத்தை 15% இலிருந்து 18% ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இனிமேலும் எம்மால் சலுகைகளை அடிப்படையாக கொண்டு முன்னோக்கிச் செல்வது கடினம். அரச வருமானத்தை அதிகரிக்கும் அத்தியாவசியமான காரணத்தினால் இந்த வரித் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கூற வேண்டும். இதற்குத் தேவையான பல்வேறு வரித் திருத்தங்கள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டாகும்போது VAT வரிக்காக பதிவு செய்யப்படும் எல்லை 15 மில்லியனாக காணப்பட்டது. ஆனால் 2020 ஜனவரி 01 முதல் அந்த எல்லை 300 மில்லியனாக உயர்த்தப்பட்டது. அதன் மூலம் வற் வரிக்கு பதிவு செய்யப்பட்டிருந்த ஏராளமான வரிக் கோப்புகள் செயலிழந்தன. ஆனால் பின்னர் அது 80 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. புதிய திருத்தத்தின்படி 2024 ஜனவரி 01 முதல் 60 மில்லியன் ரூபாவாக மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏராளமான வரி விலக்குகளை நீக்க புதிய திருத்தத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் இழந்த பெரும் வருமானத்தை மீட்பதே இதன் நோக்கமாகும்.

ஆனால் சிலர் இந்த நடவடிக்கை குறித்து தவறான கருத்துக்களை சமூகமயமாக்கி வருகின்றனர். ஜனவரி 01 ஆம் திகதி முதல் வாழ்வது கடினம் என்றும், வரி திருத்தத்தால் ஒரு குடும்பம் பெரும் செலவைச் சுமக்க நேரிடும் என்றும் சிலர் கூறுகின்றனர். வரி திருத்தம் காரணமாக சில மேலதிக செலவுகள் ஏற்படும் என்றாலும், சிலர் கூறும் அளவுக்கு அது அதிகமானதாக இருக்க மாட்டாது என்பதையும் தெரிவிக்க வேண்டும். மேலும், பெறுமதி சேர் வரி உள்வாங்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி, உரிய வரி திருத்தங்களை செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே எடுத்து வருகிறது.

எடுத்துக்காட்டாக, சில பொருட்களை இறக்குமதி செய்யும் போது துறைமுகம் மற்றும் விமான நிலைய வரி விதிக்கப்படும். வற் வரி அதிகரிப்பின் தாக்கத்தை குறைக்க அந்தப் பொருட்களில் இருந்து துறைமுகம் மற்றும் விமான நிலைய வரியை நீக்கி வற் வரியை மாத்திரம் விதிப்பது போன்ற சாதகமான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட உள்ளன.

ஜனாதிபதி அலுவலக அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் கே.கே.ஐ.எரந்த.

பெறுமதி சேர் வரி என்பது நமது நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் காரணிகளில் பிரதானமானதாகும். 2023 ஆம் ஆண்டில் VAT வரி மூலம் 600 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான வருமானம் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சுமார் 450 பில்லியன் மாத்திரமே பெறப்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்கு VAT வரி மூலம் சுமார் 1400 பில்லியன் ரூபா வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்ப்பு எவ்வாறு இருந்தாலும், வெளிவாரி, உள்ளக மற்றும் வரி விலக்கு போன்ற வரிக் கசிவு போன்ற காரணிகளால் இந்த வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம். இதன் காரணமாக வரி செலுத்துவோர் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வரி விலக்குகளை குறைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. ஆனாலும், மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி விலக்குகள் நீக்கப்படவில்லை.

கல்வி சேவைகள், மின்சாரம், சுகாதாரம், மருத்துவம், பயணிகள் போக்குவரத்து, உணவு, அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்பட சுமார் 90 வகையான பொருட்களுக்கு VAT வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், நெத்தலி, பெரிய வெங்காயம், கருவாடு போன்ற சிறப்பு வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ள 65 வகையான பொருட்களுக்கு VAT வரி தாக்கம் செலுத்தாது.

## ரயில் பயணிகளுக்கான முக்கிய அறிவிப்பு



வடக்கு ரயில் வீதியின் அனுராதபுரத்திற்கும் மஹவவிற்கும் இடையிலான ரயில் சேவையை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு ரயில் வீதியின் இரண்டாம் கட்ட நவீனமயமாக்கல் பணிகள் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி ஜனவரி 7ஆம் திகதி முதல் 06 மாத காலத்திற்கு குறித்த வீதியில் இயங்கும் ரயில்கள் தற்காலிகமாக நிறுத்தப்படும்.



# பிராந்திய செய்திகள்



## A/L மேலதிக வகுப்புகளுக்குத் தடை




2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடாத்துவதற்கு (29) நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை முடியும் வரை இந்த தடை அமுலில் இருக்கும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி தடையை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர வலியுறுத்தியுள்ளார். இவ்வருட உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 04ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 2298 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது.

## நாட்டில் அதிகரிக்கும் பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI) அடிப்படையிலான இலங்கையின் முதன்மை பணவீக்கம் டிசம்பர் மாதத்தில் 4% ஆக அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பவரில் முதன்மை பணவீக்கம் 3.4% ஆக பதிவாகியிருந்த நிலையில், டிசம்பரில் அது 0.6 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2023 நவம்பரில் -3.6%இல் இருந்த உணவுப் பணவீக்கம் 2023 டிசம்பரில் 0.3% ஆக உயர்ந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## நிதி நிறுவனங்களை சீரமைக்க அதிகார சபை

நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையை மத்திய வங்கி சரியான முறையில் மேற்கொள்ளாததால், எதிர்காலத்தில் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள புதிய அதிகார சபையொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் மத்திய வங்கியால் பொருளாதாரத்தை உரிய முறையில் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே தற்போதைய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

வரி விதிப்பினால் குறுகிய கால துன்பங்களை அனுபவித்தாலும் நீண்டகால நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## ஜனவரி முதல் நீர் கட்டணம் அதிகரிக்கிறது

VAT அதிகரிப்புக்கு ஏற்ப 2024 ஜனவரி முதல் நீர் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய 3% நீர் கட்டணம் அதிகரிக்கப்படும் என தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்தார்.

## டீ– சேர்ட் அறிமுக விழா



கமு/அக்/அட்டாளைச்சேனை அரபா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் நடாத்தும் அரபா பிரீமியர் லீக் சுற்று தொடருக்கான டீ- சேர்ட் அறிமுக நிகழ்வும் பழைய மாணவர்கள் சங்க சீருடை அறிமுகமும் பழைய மாணவர்கள் சங்க ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பைசல் காசிம் மற்றும் கிழக்கின் கேடய பிரதானியும் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ்.எம்.சபீஸ் அவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் அப் பாடசாலையின் பழைய மாணவர்களான கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், பொத்துவில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். எம்.ஹனிபா, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், அப்பாடசாலையின் அதிபர் மற்றும் முன்னாள் அதிபர்கள், கல்வி அதிகாரிகள், 300க்கும் அதிகமான பழைய மாணவர்கள் என பலரும் கலந்து

## நாட்டில் வேகமாக பரவும் தட்டம்மை நோய்



இந்த ஆண்டு மே மாதம் முதல் இந்த நாட்டில் 700க்கும் மேற்பட்ட தட்டம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் கொழும்பு, கம்பஹா மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலேயே அதிகளவானோர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இது தவிர களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, குருநாகல் மாவட்டங்கள் மற்றும் கல்முனை பிரதேசங்களில் இருந்தும் அம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தட்டம்மை என்பது மோபிலி வைரஸ் இனத்தைச் சேர்ந்த பெராமிக்ஸோ வைரஸால் மிகவும் வேகமாக பரவும் நோயாகும். சுவாசக்குழாய் வழியாக உடலினுள் நுழையும் வைரஸ் நோயின் அறிகுறிகள் இரண்டு வாரங்களுக்குப் பிறகு தென்படும் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். இதன் பிரதான அறிகுறிகள் காய்ச்சல், தடிமன், மூக்கு ஒழுகுதல் மற்றும் கண்கள் சிவத்தல்.

வெற்றிகரமான தடுப்பூசி திட்டத்தின் பின்னர் 2019 ஆம் ஆண்டில் இலங்கை அம்மை நோயில் இருந்து விடுபட்டிருந்தது. தெற்காசியாவில் அம்மை நோயை ஒழித்த ஐந்து நாடுகளில் இலங்கையும் ஒன்றாக காணப்பட்டது. எவ்வாறாயினும், நான்கு வருடங்களின் பின்னர் இலங்கையில் இருந்து தட்டம்மை நோயாளர்கள் பதிவாகின்றமை கவலையளிக்கின்றது.

இலங்கையில் மீண்டும் பதிவாகும் தட்டம்மை நோய் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனமும் அவதானம் செலுத்தி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி, தட்டம்மை நோயை ஒழிக்க உலக சுகாதார அமைப்பின் தெற்காசிய மண்டலம் மற்றும் தேசிய ஆலோசனைக் குழுவிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் தடுப்பூசி போடும் திட்டம் ஆரம்பிக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## சுனாமி ஏற்பட்டால் புதிய எச்சரிக்கை வரும்




உலக வரலாற்றில் ஒரு இருண்ட நினைவை சேர்க்கும் வகையில், இலங்கை உட்பட பல நாடுகளில் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்களைப் பலி கொண்ட சுனாமி அனர்த்தம் இடம்பெற்று (26) 19 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

அந்த பெரும் சோகத்தில் உயிரிழந்த இந்நாட்டு மக்களுக்காக நாடளாவிய ரீதியில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தோனேசியாவின் சுமத்ரா தீவுக்கு அருகே கடலின் அடிப்பகுதியில் ரிக்டர் அளவுகோலில் 9 அலகுகள் அளவுக்கு வலுவான நிலநடுக்கம் ஏற்பட்டு பல நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

காலை 6.58 மணியளவில், சுமத்ரா தீவுக்கு அருகில் ஏற்பட்ட சுனாமி அலைகளில் மிகவும் வலுவானது, இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு மணிக்கு 800 கிலோமீட்டர் வேகத்தில் இலங்கையை அடைந்தது. காலை 9.22 மணியளவில் அந்த சுனாமி அலைகள் இலங்கையை தாக்கியது. என்ன நடந்தது என்பதைச் சிந்திக்கக்கூட நேரம் விடாமல் சில நிமிடங்களில் நாட்டில் முப்பத்தைந்தாயிரம் உயிர்களைப் பறித்த சுனாமி அலைகள் பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களையும் அழித்தன. இச்சம்பவத்தால் மறைந்தவர்களை நினைவுகூரும் வகையில் முற்பகல் 09.25 முதல் 09.27 வரை 2 நிமிடம் வருடாந்த மௌன அஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்தப் பின்னணியில், சுனாமி குறித்த முன்கூட்டியே அறிவிக்கும் புதிய தொலைபேசி செயலியை அறிமுகப்படுத்த அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க இதனைத் தெரிவித்தார்.

"சுனாமி அபாயம் உள்ள 14 மாவட்டங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் சுனாமி அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் தொடர் தொலைபேசி ஒலியுடன் உடனடியாக தகவல் தெரிவிக்கும் சிறப்பு நிகழ்ச்சித் திட்டம் அனைத்து தொலைபேசி சேவையாளர்களின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படும்." என்றார்.



# சினி துளிகள்



## கேப்டன் மறைந்தார் - ஆழ்ந்த அஞ்சலிகள்!



## மனம் திறந்த சிவகார்த்திகேயன்



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவராக இருப்பவர் சிவகார்த்திகேயன். தற்போது இவர் நடிப்பில் உருவாகியுள்ள அயலான் படம் வருகிற ஜனவரி மாதம் 12 -ம் திகதி வெளியாக உள்ளது. இப்படத்திற்கான ப்ரோமோஷன் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

சமீபத்தில் பேட்டி ஒன்றில் கலந்துகொண்ட சிவகார்த்திகேயன் பல விஷயங்களை பகிர்ந்துள்ளார். அதில் அவர், சினிமாவில் காமெடி காலத்திற்கேற்ப மாறிக்கொண்டு தான் இருக்கிறது. முன்பெல்லாம் காமெடி என்ற பேரில் எல்லா விஷயத்தையும் சொன்னோம் ஆனால் இப்போ அப்படி செய்ய முடியாது.

அதை நான் குறையாக பார்க்கவில்லை. என் மீதும் பல விமர்சனங்கள் இருந்தது. அதை எல்லாம் ஆக்கபூர்வமான விமர்சனமாக தான் பார்க்கிறேன். அது நான் வேண்டும் என்று செய்யவில்லை. இனி நல்ல விஷயங்களை என்னுடைய படத்தில் சேர்க்கவேண்டும் என நினைக்கிறேன் என்று சிவகார்த்திகேயன் கூறியுள்ளார்.

## ஒஸ்கார் புகழ் "லீ சுன் கியுன்" மர்ம மரணம்

பாங் ஜூன் ஹோ இயக்கத்தில் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்ற திரைப்படம் தான் "பாரசைட்". இப்படம் சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குனர் எனப் பல பிரிவுகளின் கீழ் ஒஸ்கார் விருதுகளை வென்றது. இந்த படத்தில் நடிகர் லீ சுன் கியுன் முக்கியமான ரோலில் நடித்து இருந்தார்.

தற்போது 48 வயதாகும் லீ, சியோல் நகரில் உள்ள ஒரு பூங்காவில் மர்மமான முறையில் இறந்து கிடந்துள்ளார். இவரது உடலை கைப்பற்றிய பொலீஸார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.



லீ சுன் கியுன் மறைவுக்கு ரசிகர்கள் மற்றும் பல திரைப் பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். சமீபத்தில் லீ சுன் கியுன் போதைப்பொருட்கள் பயன்படுத்தியதாக பொலீஸ் விசாரணையில் இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணுடன் முகத்தை மூடி ஓடும் விஷால்

நடிகர் விஷால் 46 வயதாகியும் தற்போது வரை திருமணம் செய்யாமல் தான் இருக்கிறார். அவரை பற்றி பல்வேறு காதல் கிசுகிசுக்கள் கடந்த பல வருடங்களாக வந்து கொண்டிருக்கின்றனர்.

அவருக்கு ஏற்கனவே நிச்சயதார்த்தம் ஆன நிலையில் திருமணம் சில காரணங்களால் நின்றுவிட்டது. நடிகர் சங்க கட்டிடத்தை கட்டி முடித்துவிட்டு தான் திருமணம் செய்வேன் என தொடர்ந்து அவர் கூறி வருகிறார்.

இந்நிலையில் சில தினங்கள் முன்பு விஷால் அமெரிக்காவில் ஒரு பெண் உடன் சுற்றிகொண்டிருக்கும் வீடியோ ஒன்று வைரல் ஆனது.

கேமராவை பார்த்ததும் விஷாலை முகத்தை மறைத்துக்கொண்டு ஓடிச்செல்வது போல அந்த வீடியோ இருந்தது.

இந்நிலையில் அந்த வீடியோ பற்றி விஷால் விளக்கம் கொடுத்து இருக்கிறார். அந்த வீடியோ பாதி உண்மை, பாதி பொய் என கூறி இருக்கிறார் அவர்.

நான் அமெரிக்காவில் நியூ யோர்க்கில் இருப்பது உண்மை தான். வருடம் தோறும் என்னுடைய cousins உடன் அங்கே செல்வது வழக்கம்.

"இன்னொரு பாதி என்னவென்றால் அந்த வீடியோ என்னுடைய cousins செய்த prank தான். அதனால் அதை பற்றி டிடெக்ட்டிவ் வேலை செய்து பரப்பப்படும் செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்" என விஷால் கூறி இருக்கிறார்.



## மாஸ் பிளான் போடும் அஜித்

துணிவு பட ரிலீஸுக்கு பிறகு பெரிய இடைவெளி எடுத்துக்கொண்ட அஜித் தற்போது விடாமுயற்சி படத்தில் நடித்து வருகிறார். மகிழ் திருமேனி இயக்கும் அந்த படத்தின் ஷூட்டிங் அசர்பைஜான் நாட்டில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. அதில் அர்ஜுன், த்ரிஷா, பிக் பொஸ் ஆரவ் உள்ளிட்ட பலர் நடித்து வருகின்றனர்.

இந்நிலையில் விடாமுயற்சி படத்தின் ரிலீஸ் எப்போது என்கிற விபரம் வெளியாகி இருக்கிறது. அஜித்தின் பிறந்தநாளான மே 1ம் திகதி விடாமுயற்சி படத்தை ரிலீஸ் செய்ய படக்குழு திட்டமிட்டு வருகிறதாம். அதற்கு தகுந்தபடி தான் ஷூட்டிங் பணிகளும் நடைபெற்று வருகிறது.

அஜித் விடாமுயற்சி ஷூட்டிங் முடித்துவிட்டு ஏப்ரல் மாதத்திலேயே இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் தனது அடுத்த படத்தை தொடங்க இருக்கிறார்.



# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலும், ரணிலின் சர்வதேச விசாரணையும் - நடக்கப்போவது என்ன?

## பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

கடந்தவாரத் தொடர்ச்சி...

**கேள்வி : கிழக்கின் ஆளுநர் எவ்வாறு செயற்படுகின்றார்?**

**பதில் :** ஆளுநர் விடயத்தைப் பார்க்கின்றபோது தற்போது இருப்பவரை விட, முதல் இருந்த ஆளுநரின் சிங்கள செயற்பாடுகள் அனைத்தும் தவறானது. டிலீத் ஜயவீர தேர்தலில் போட்டியிடப் போகிறவர் அருகில் முன்னாள் ஆளுநர் நிற்கிறார். அவரும் தேர்தலில் களமிறங்கும் சிந்தனையில் உள்ளார் போலத் தெரிகிறது. கிழக்கின் ஆளுநர் மாற்றத்தினால் எங்களது பல பிரச்சினைகள் முடிந்துள்ளது.

முன்னாள் ஆளுநர் தன்னிச்சையாகபலபிரச்சினைகளைக் கையாண்டவர். தற்போதைய ஆளுநர் உண்மையில் தன்னால் இயன்றளவில் பிரதேச செயலக மட்டத்தில் இருக்கக்கூடிய பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயற்சிகளை மேற்கொள்கிறார். எனினும் சில பிரச்சினைகள் அதாவது மகாவலி அதிகார சபையைப் பொறுத்தவரை அதனை கிழக்கு மாகாண ஆளுநர் மட்டத்தில் முடிக்க இயலாது. ஒரு அமைச்சருக்குரிய அதிகாரங்கள் ஆளுநருக்கு இருந்தாலும்மகாவலிக்கு பொறுப்பான அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கையினை முன்வைக்கலாமே தவிர, நூறு வீதம் பிரச்சினையைத் தீர்க்க அமைச்சரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆளுநருக்கு கிடையாது. சில சில விடயங்களில் அவருடைய ஆதரவு இருக்கிறது. மயிலத்தமடு - மாதவனை பிரச்சினையில் ஜனாதிபதியிடம் தமிழர்கள் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதைக் கூறியிருக்கின்றார்.

**கேள்வி : தமிழரசுக் கட்சியினது அடுத்த தலைமை குறித்து?**

**பதில் :** அது தானாகவே நடக்கும். கட்சியின் அடுத்த மாநாடு நடக்கவிருக்கின்றது. அதில் தெரிவு இடம்பெறும்.

**கேள்வி : இலங்கையின் தேர்தல்களைத் தட்டிக்கழிக்கும் போக்கு தொடர்கின்றது. இன்றைய ஜனநாயகப் போக்கு குறித்து உங்களின் கருத்து என்ன?**

**பதில் :** நான் கிழக்கு மாகாணத்திற்காக மட்டுமோ அல்லது மட்டக்களப்பு மாவட்டத்துக்காக மட்டும் குரல் கொடுப்பதில்லை. ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களுக்காகவும் முன்னுரிமை அளிப்பவன். இலங்கையில் எந்த மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறதோ நான் அந்த இடத்திலே குரல் கொடுப்பவன். இது என்னுடைய தனிப்பட்ட கொள்கையாக நான் வைத்துள்ளேன். எங்களுடைய தமிழ் மக்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றபோது அதனை நாங்கள் தவறு எனக் கூறும்போது சிங்களவர்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றபோதுஅதனைநல்ல விடயம் என்று கூற முடியாது. அந்த வகையில் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களுக்காகவும்நான் முக்கியத்துவம் கொடுப்பவன் ஏனென்றால் அந்த மக்களின் வாக்குகளால் தான் நான் தெரிவுசெய்யப்பட்டேன். ஆகவே எனக்கு பொறுப்பும் கடமையும் இருக்கிறது. அதேபோல் நாங்கள் அனைவரும் அவ்வாறிருந்தால் நல்லது. ஏனையவர்களுக்கு அநீதி நடைபெறாத அளவிற்கு இன்னொருவருடைய சுதந்திரம் எப்போது மறுக்கப்படுகிறதோ, அந்த இடத்தில் எங்களுடைய சுதந்திரம் என்று கூற முடியாது. என்னுடைய சுதந்திரம் இன்னொருவருடைய சுதந்திரத்தை மறுக்கக்கூடாது.

ஜனநாயகம் - தேர்தல் என்கிறபோது உண்மையில் நாங்கள் இன்னும் தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்கவில்லை. அடுத்த வருடம் தேர்தல் நடைபெறுமா இல்லையா? அதற்குரிய தயார்ப்படுத்தல்கள் என்பதற்கு அப்பால், என்னுடைய அறிவினை வளர்த்துக்கொள்வதற்காக நான் அதிகமாக வெளியிடங்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று கற்றும் வருகிறேன். ஏனென்றால் நாங்களும் எங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். நாங்களும் எங்களுடைய மக்களுக்கு புதிய புதிய சிந்தனைகளைக் கொடுக்க முடியும். அவ்வாறான விடயங்களுக்குதற்போது முக்கியத்துவம் கொடுக்கிறேன். தேர்தல் என்பதை விட.

**கேள்வி : அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று வருகிறபோது நீங்கள் யாரை ஆதரிப்பீர்கள் என்கிற பல கேள்விகள் இருக்கிறது?**

**பதில் :** நான் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து எனது நேரத்தை தற்போது செலவிடுவதில்லை. கற்பதில் எனது நேரத்தை செலவழிக்கிறேன். சட்டத்தின் படி பார்த்தால் அடுத்த வருடம் நவம்பர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும் என நினைக்கிறேன். ஆனால் தற்போது பார்த்தால் இந்த பந்தயத்தில் எத்தனையோ குதிரைகள் தயாராக இருப்பதாகத் தெரிகிறது. அதில் நான் தனி நபராகப் பந்தயம் கட்ட முடியாது. தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பவர் யார் என்பதைப் பார்த்து அந்தக் குதிரைக்கு கட்சி என்ற ரீதியில் நாங்கள் பந்தயம் கட்ட வேண்டும். இன்றைய தேர்தல் போட்டியில் தெரிந்த பெயர்களைப் பார்த்தால் ரணில் விக்கிரமசிங்க அவர்கள், சஜித் பிரேமதாசா அவர்கள், அநுரகுமார திசாநாயக்கா அவர்கள், தம்மிக்க பெரேரா மற்றும் டிலீத் ஜயவீரவும் அறிவித்திருக்கிறார்கள். இவர்கள் ஐந்து பேர்கள் தான் போட்டியிடப் போவதாகக் கூறியிருக்கிறார்கள்.

இவ்வாறானநிலைமைவந்தால் வாக்குகள்சிதறடிக்கின்றபோது,கடந்த தேர்தலிலும் பலர் போட்டியிட்டதால் வாக்குகள் சிதறடிக்கப்பட்டது. டிலீத் ஜயவீர என்பவர் ஒரு செல்வந்தர். அவருக்குப் பின்னால் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிப்பவர்கள் நிற்கிறார்கள். கோட்டாபய ராஜபக்ஷ வை வெற்றிபெற வைக்க இவர்கள் பாடுபட்டவர்கள். தம்மிக்க பெரேரா மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர். பசில் ராஜபக்ஷ தான் அவரைபாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தார். அவருடைய இடத்திற்குத் தான் தம்மிக்க பெரேரா வந்தார்.



சஜித் பிரேமதாசாவைப் பொறுத்தவரை நாடு முழுவதும் ஒரு கட்டமைப்பை வைத்துள்ள ஒரு மக்கள் சக்தி. இவர்களுடன் மொட்டும் வருகிறது. ஜேவிபியினரை எடுத்துக்கொண்டால் இதில் அநுரகுமார தேர்தலில் போட்டி யிடுவார். நாங்கள் இவர்கள் எல்லோருக்கும் வாக்குகளை வழங்கி களைத்துப்போய் விட்டோம். ஒரு புதியவரைமக்கள்எதிர்பார்க்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவருக்கு கட்சி கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி கடந்த தேர்தலில் வாக்குகளாக தேசியப் பட்டியல் ஒன்று தான் கிடைத்தது. அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தல் குறித்து கணிப்பீடு செய்ய முடியாதுள்ளது. ஆனால் ஜனநாயக முரணான செயற்பாடுகளை நாங்கள் ஆதரிக்க முடியாது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டதைப் போல.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு செல்வதாக குறிப்பிட்டிருப்பதை செய்திகளில் பார்த்தேன். அப்படிச் செல்வதாக இருந்தால் வடகிழக்கு அதிகாரப் பகிர்வினையும் அந்த சர்வஜன வாக்கெடுப்பில் அவர் உள்வாங்கலாம்.

**கேள்வி : மாகாண சபைகளுக்கானத் தேர்தலுக்கு என்ன நடந்தது?**

**பதில் :** மாகாண சபைத் தேர்தல் என்பது நாங்கள் சட்ட ரீதியாக எல்லை நிர்ணயம் செய்வதில் பிரச்சினை. ஒரு சிறு மாற்றம் கொண்டுவரப்படவேண்டும். அதற்கு கடந்த காலத்தில் சட்டம் இருந்ததைப்போல மீண்டும் திருத்தம் செய்து மீண்டும் தேர்தலை நடத்துவதற்காக தனிநபர் பிரேரணை ஒன்றை கௌரவ சுமந்திரன் அவர்கள் சபைக்குக் கொடுத்து அது நீதிமன்றம் சென்று அது பாராளுமன்றத்திற்கு வந்திருக்கிறது. சரி நீங்கள் இந்த சட்டத்தை அமுல்படுத்தினால் பழைய முறையிலே தேர்தலை நடத்தலாம் என்று. 113 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினால் சரி. ரணில் அவர்கள் நாளைக்கு நினைத்தாலும் அது நடைபெறும். ஆனால் ஜனாதிபதிக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற நோக்கம் இல்லை. அவர் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்துச் செயற்படுகின்றார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை பிற்போட முன் அனைத்து கட்சிகளையும் இணைத்து கூட்டமொன்று நடைபெற்றது. அதில் நானும்கௌரவ சுமந்திரன் அவர்களும் கலந்து கொண்டிருந்தபோது, நாங்கள் நாட்டில் எந்தவொரு தேர்தலும் பிற்போடக்கூடாது எனக் கூறியிருந்தோம். அதில் பிரதான எதிர்க்கட்சி அல்ல தற்போது எதிர்க்கட்சி போல பாசாங்கு காட்டிக்கொண்டிருக்கும் ஒரு சிலர் இல்லை இல்லை. நீங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை நடத்தவேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்ற பொருள்பட கதைத்தனர். அவர்களின் மனநிலையில் மாகாண சபைத் தேர்தல் தேவையில்லாத விடயம். அப்படியான நிலையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தவே ஜனாதிபதி முனைப்பு காட்டுகிறார். பந்தயத்தில் சில குதிரைகள் வேகமாக ஓடும். ஆனால் அந்தக் குதிரை தமிழ் மக்களுக்கு விரோதமான நிலைப்பாடுகளையும் எடுக்கும். அந்தக் குதிரையினை நாங்கள் தோற்கடிக்கவேண்டும். வேகமாக ஓடினாலும் அந்தக் குதிரையை நொண்டியாக்கிவிட்டால் தான் நாங்கள் எங்களுடைய தமிழ் மக்களைக் காப்பாற்றலாம்.

உதாரணத்திற்கு கடந்த தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வேகமாக ஓடி வெற்றி பெறக்கூடிய குதிரை என்பது அனைவருக்கும் தெரியும். இருந்தாலும் நாங்கள் அவரை ஆதரிக்கவில்லை. அவர் சிங்களப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றாலும் நாங்கள் வெற்றிபெறும் குதிரை என்று மாத்திரம் பார்க்க முடியாது. தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியவராகவும் பார்க்க வேண்டும். டிலீத் ஜயவீர கோடிக்கணக்கான பணத்தினை செலவழித்து வெற்றி பெறக் கூடியவராகஇருந்தாலும்கூட அவரைச் சுற்றியிருக்கக்கூடியவர்களைப் பார்த்தால் தமிழ் மக்களை அழித்தவர்கள், அழிக்கக்கூடியவர்கள். முன்னாள் ஆளுநர் அநுராதா யகம்பத் அருகில் இருக்கிறார் எனில் வேறு எதுவும் தேவையில்லை. அபசகுனம் என்று கூறுவார்கள் அல்லவா அதுபோலத்தான். டிலீத் ஜயவீர, அவரைப் பக்கத்தில் எடுத்ததால் தமிழ் மக்களது வாக்குகள் எதுவும் கிடைக்கமாட்டாது.

**நேர்காணல் : இரணியன்**

# தமிழ் காங்கிரஸ் X தமிழரசுக் கட்சி



கடந்தவாரத் தொடர்ச்சி...

இதற்கு சிங்களவர்களிடத்திலிருந்து வெளிப்பட்ட எதிர்ப்புணர்வைக் கண்டு தனது வெற்றிவாய்ப்பு பறிபோய்விடும் என அஞ்சிய கொத்தலாவல அவர்கள், யூ.என்.பியின் களனிய மகாநாட்டைக் நடாத்தி அதில் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக இருக்கும் என்ற அறிவிப்பை செய்தார்.

இதன் மூலம் சிங்கள மக்களை தனது எதிராளியான கொத்தலாவல தன்வசமாக்கிவிடக் கூடும் என உணர்ந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா 24 மணி நேரத்தில் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவேன் என மிகத் தீவிரமான அறிவிப்பினை விடுத்தார். சிங்கள மக்களைப் பொறுத்தவரை தங்களுடைய வாக்குப் பலத்தினால் இரண்டு தலைவர்களையும் தங்களுடைய கோரிக்கைக்கு சார்பானவர்களாக ஆக்கியிருந்தார்கள்.

சிங்கள மக்களிடத்தில் 1956 ஆம் ஆண்டு தேர்தலின் மையப்பொருளாக சிங்களம் மட்டும் என்பதே இருந்தது. இதனை ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, புரட்சிவாத சமசமாசக் கட்சி, சமசமாஜக் கட்சி போன்ற கட்சிகள் மிகக் காரசாரமாக முன்னெடுத்தன. லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து என்ற கொள்கையினைக் கடைப்பிடித்து பிரசாரங்களை முன்னெடுத்தன. இவ்வாறு சம அந்தஸ்துப் பேசிய பல கூட்டங்கள் சிங்களபேரினவாதிகளால் குழப்பப்பட்டபோதும் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்கள் கொள்கைகளில் இருந்து பின்வாங்கவில்லை என்பதை தமிழர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

மேற்படி கட்சியினரின் கூட்டங்கள் சிங்களத் தீவிரவாதிகளினால் குழப்பப்பட்ட போதிலும் கலாநிதி என்.எம். பெரேரா சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துடைய மொழிகளாக இருக்க வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்து பின்வருமாறு உரையாற்றினார். "இன்று பிரபலமான கருத்தாகிய சிங்களம் மட்டும் என்பதை ஆதரிப்பது எனக்கும் எனது கட்சி அங்கத்தவர்களுக்கும் எளிதாக இருக்கும். மற்றவர்களைப் போல் நாமும் வீரபுருஷர்களாக போற்றப்பட்டிருப்போம். ஆனால் நாம் தொடர்ந்து உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். இந்நிலைப்பாடு மிகவும் சரியானது எனக் கருதியதால் நாம் அதிலிருந்து மாறவில்லை. இன்றுவரை அதனையே கைக்கொண்டுள்ளோம். இது மற்றவர்களின் எதிர்ப்பை பெருமளவில் பெற்றபோதும் இந்தக் கருத்து சரியானது என்பதில் நான் மிகவும் உறுதியாக உள்ளேன். இவ்வாறு கூறுவதால் அரசியல் பதவியில் சில காலம் நாம் இல்லாமல் போவதற்கு வழிவகுத்தாலும் எஸ்.எஸ்.எஸ்.பி. அங்கத்தினராகிய நாம் அவற்றை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்." (மேற்கோள். குமாரி ஜயவர்த்தன) என எந்தவித தேர்தல் இலாபங்களையும் கருதாது சிறுபான்மையினர் உரிமை விடயத்தில் மிக உறுதியாக இருந்துள்ளனர்.

இடதுசாரிகளினுடைய சனநாயக நிலையினால் மிக வேகமாக வளர்ந்துகொண்டிருந்த இனவாதத்தினை வெற்றிகொள்ள முடியாமல் போய்விட்டது. 1956 ஆம் ஆண்டு தேர்தலில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா தலைமை தாங்கிய மக்கள் ஐக்கிய முன்னணி என்ற மகாஜன எக்சத் பெரமுன (எம்.ஈ.பி) 51 இடங்களையும் இடது சாரிகள் 17 இடங்களையும் யூ.என்.பி 08 இடங்களையும் பெற்றன.

சிங்கள தேசிய உணர்வுக்கு எதிராக தமிழ்த் தேசிய உணர்வை முன்வைத்து தேர்தலில் நின்ற எஸ்.ஜே. வி.செல்வநாயகம் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சியினர் 08 இடங்களையும் ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் ஒரு இடத்தினையும் பெற்றன.

சிங்கள மொழியின் அமுலாக்கமே தேர்தலின் மையப் பொருளாக இருந்ததன் காரணத்தினால் பண்டாரநாயக்கா தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முதல் மசோதா தனிச் சிங்களச் சட்டமூலமாகவே இருந்தது. இம்மசோதாவை சமர்ப்பித்து உரையாற்றிய பண்டாரநாயக்கா ஆங்கிலத்தைப் பயன்படுத்தியதனால் ஏற்பட்ட தீய விளைவுகளைச் சுட்டிக்காட்டியதோடு மொழியின் சம அந்தஸ்தினை சிங்கள மக்கள் தங்களுடைய மொழியின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கும் எனவும் அது சிங்கள மொழியின் அழிவுக்குக் காரணமாகும் எனவும் எண்ணினர் எனக் குறிப்பிட்டார்.

அனில் முனசிங்கா "எஸ்.எஸ். எஸ்.பியும் வேறு புரட்சிகரக் கட்சிகளும் இவ்வகுப்புவாதத்திற்கு எதிராகப் போராடும். எந்தச் சூழ்நிலையிலும் இனவாதத்தை நாம் ஆதரிக்கோம். இத்தீவில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் ஒரேவிதமான உரிமையை பெற்றுக் கொடுப்பதற்காக நாம் போராடவேண்டும்" (மேற்கோள்குமாரி ஜயவர்த்தன) என்றார். இது போன்றே முக்கிய இடதுசாரித் தலைவர்களான லெஸ்லி குணவர்த்தன, கொல்வின் ஆர்.டி.சில்வா போன்றவர்கள் தனிச் சிங்களச் சட்டம் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு விரும்பத்தகாத எதிர்வினைகளை ஏற்படுத்தும் என அரசாங்கத்தை எச்சரிக்கை செய்யத் தவறவில்லை.

தமிழ்த் தலைவர்களோ எந்தவித திட்டங்களுமின்றி தமிழர்களை உணர்ச்சிவசப்படுத்தக் கூடியதும் சிங்களவர்களை கோபமேற்படுத்தக் கூடியதுமான வாதங்களை முன்வைத்தனர். உதாரணமாக "சி.சுந்தரலிங்கம் அவர்கள் சிங்களம் மட்டும் மசோதாவை மிகவும் கடுமையாக எதிர்த்தார். சிங்களம் மட்டும் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டால் தமிழர் தமக்கெனத் தனியான அரசை அமைக்கின்ற நிலை ஏற்படும் என நாடாளுமன்ற விவாதத்தின் போது எச்சரிக்கை செய்தார். ஜி.ஜி. பொன்னம்பலமும் அதே கருத்தையே தெரிவித்தார்." (முருகர் குணசிங்கம்)

தமிழ்த் தலைவர்களின் உணர்ச்சிகரப் பேச்சுக்களையோ அல்லது இடதுசாரிகளின் யதார்த்தமான எச்சரிக்கைகளையோ பொருட்படுத்தாத எஸ்.டபிள்யூ.ஆர். டி.பண்டாரநாயக்கா மசோதாவை வாக்கெடுப்புக்காக நாடாளுமன்றில் சமர்ப்பித்தார். இதன்போது ஆதரவாக 66 வாக்குகளும் எதிராக 29 வாக்குகளும் கிடைத்தன. எதிராக வாக்களித்த கட்சிகள், கம்யூனிஸ்ட் கட்சி, எஸ்.எஸ்.எஸ்.பி, தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் என்பனவாகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து யூ.என்.பியும் ஆதரித்து வாக்களித்தது.

நாட்டின் தேசியக் கொள்ளை தொடர்பாக எப்போதும் எதிரும் புதிருமாக இருக்கும் இந்த இருபெரும் கட்சிகளும் சிறுபான்மையினரை அடக்கி சிங்களப் பேரினவாதத்தினை வளர்த்தல் எனும் விடயத்தில் அக்கறையுடன் ஒன்று சேர்ந்தன. இந்தப் பேரினவாதக் கூட்டுடன் முஸ்லிம் சிறுபான்மையினராகிய சி.ஏ.எஸ்.மரிக்கார், ராசிக் பரீட் ஆகிய இருவரும் தங்களுடைய நலனுக்காக தமிழ் மொழிக்கும் சிறுபான்மையினருக்கும் துரோகமிழைத்து ஆதரவாக வாக்களித்தனர்.

பிரஜா உரிமைச் சட்டத்திலும் சரி, சிங்கள மொழிச் சட்டத்திலும் சரி பெரும்பான்மையினம் இன்னொரு சிறுபான்மையினத்தின் உரிமைகளை நாடாளுமன்ற சனநாயகம் எனும் போர்வையில் அடக்கி ஒடுக்குவதற்கான கருவியாக எடுத்துக்கொண்டது. இது சனநாயக மீறலே தவிர சனநாயகம் அல்ல. இந்த சனநாயக மீறலை தமிழ்த் தலைவர்கள் பிரித்தானிய அரசிடம் அல்லது அவர்கள் குறிப்பிடுகின்ற சர்வதேசத்திடம் சரியான முறையில், முன்வைக்கத் தவறி எந்தவிதமான எதிர்காலத் திட்டங்களுமற்ற உணர்ச்சிகரமான அரசியலையே செய்தார்கள்.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின் உருவான கட்சி அரசியல் காரணமாக மத்தியதர சிங்கள மக்களை பௌத்த சிங்கள அடிப்படைவாதத்துக்கு உள்ளாக்கி வளர்த்தெடுப்பதில் முனைப்புடன் செயற்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி, யூ.என்.பி போன்ற இருபெரும் முதலாளித்துவக் கட்சிகள், இடதுசாரித் தலைவர்களான பிலிப் குணவர்த்தனா போன்ற வர்களையே பௌத்த சிங்கள அடிப்படைவாதத்துக்குள் உள்ளிளுப்பதில் வெற்றி கண்டிருந்தன.

அப்போதிருந்த முதலாளித்துவ சிங்களக் கட்சித் தலைவர்களில் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா இலங்கைக்கு சமஷ்டி அரசியலமைப்பே பொருத்தமானது என்றும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்றும் கூறிவந்தவர். சிங்கள இனவாத வளர்ச்சியை தனது அரசியல் வெற்றிக்காக பயன்படுத்தியதனால் சிறுபான்மையினர் தொடர்பாக தான் கொண்டிருந்த கொள்கையினை அவர் விட்டிருந்தாலும் சிங்கள வர்களுடைய கோரிக்கை நியாயமற்றது என்பதை விளங்கிக் கொண்டவராகவே இருந்தார். இதனை அவருடைய பின்வரும் உரை எடுத்துக்காட்டுகின்றது.

"சிங்களவரில் பெரும்பான்மையினர் இதனை மிகத் தீர்க்கமாக வேண்டுகின்றனர் என்பது ஒரு உண்மையாகும். அவர்களது கோரிக்கை நியாயமானதா? என்பது வேறொரு பிரச்சினையாகும்." (மேற்கோள் குமாரி ஜயவர்தன) என்றார். இது போன்று சிங்கள மொழி தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்பிரகாரம் சட்டமூலத்தை தயாரிக்கும் போது, சிங்கள மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை தமிழ் மக்களின் அபிலாசைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதோடு இலங்கையில் வாழும் எல்லா இன மக்களும் அரசாங்கத்துடன் தமது தாய் மொழியில் தொடர்பு கொள்வதற்கான வசதிகளும் செய்யப்படுதல் வேண்டும் என ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்த சிங்களத் தலைவர்களினதும் சிங்கள சமூகத்தினதும் அகபுறநிலை அரசியலின் மாறுநிலையை தமிழ் தலைவர்கள் கவனத்தில் கொண்டு தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், தமிழ் மக்களிடத்தில் தாம் வீரபுருஷர் களாகவும், கதாநாயகர்களாகவும் இருப்பதற்கான அரசியலையே மேற்கொண்டனர்.

தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற கட்டடத்தின்படிகளில் சத்தியாக்கிரகம் நடத்துவது என்ற தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்தை அரசு அடக்கும் எனத் தெரிந்திருந்த போது, "உதுக்கெல்லாம் பயப்படுகிறதா? செய்வதைச் செய்யட்டும் நாங்கள் எமது முடிவை மாற்றக் கூடாது" என்றனர். அக்கருத்தை தந்தை செல்வா ஆதரித்தார்." (த.சபாரெத்தினம்)

தமிழ் மக்களுக்காக நாடாளுமன்றம் சென்றவர்கள் பெரும்பான்மை எனும் எண்ணிக்கையினை வைத்துக் கொண்டு பிரஜா உரிமை தொடக்கம் மொழி வரைக்கும் சிறுபான்மையினராகிய தமிழரை பொருட்படுத்தாத பௌத்த சிங்களப் பேரினவாத அரசில் ஒரு அங்கமாக நாம் இனி இருக்கப்போவதில்லை என்று தங்களுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை தூக்கியெறிந்து தமிழர்களுக்குச் சார்பான சிங்களச் சக்திகளுடன் ஒன்றிணைந்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சிறுபான்மையினருடன் சேர்ந்து ஒரு அகிம்சைப் போராட்டத்துக்குச் செல்வதற்கு இவர்கள் விரும்பவில்லை. அதற்குக் காரணம் தங்களுடைய பதவியையும் சுகபோகங்களையும் அந்தஸ்தினையும் இழக்க விரும்பாததோடு தமது வீரபுருஷ நிலையினையும் தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்டி அடுத்த முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவாகும் சந்தர்ப்பமும் இல்லாமல் போகும் என்பதினாலாகும்.

**சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம்**

# தமிழர் விடுதலைப் போராட்டம் ஜெனிவா வரை கொண்டு செல்லப்பட்டதன் காரணம் என்ன?

கடந்தவாரத் தொடர்ச்சி...

அதிபர் பிரேமதாசாவுடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாததால், 1990 ஜனவரி 10ல் மீண்டும் இலங்கை ராணுவம் மற்றும் புலிகளிடம் மோதல் ஏற்பட்டது.

**குற்றச்சாட்டுகள்:** கடந்த, 1991 மே 21ல், ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரசாரத்துக்கு வந்த காங்கிரஸ் தலைவர் ராஜிவ், புலிகளின் மனித குண்டுக்கு பலியானார். இதில் பிரபாகரன் குற்றம்சாட்டப்பட்டார். ராஜிவ் - ஜெயவர்தன மற்றும் அமைதிப்படை விவகாரங்களில் பிரபாகரன் அதிருப்தி அடைந்தது அதற்கு காரணமாக சொல்லப் பட்டது. 2006ல் ராஜிவ் படுகொலை பற்றி பிரபாகரன் கூறிய போது, ராஜிவ் கொலையை, 'ஒரு துன்பியல் சம்பவம்' என்றார். தமிழ் ஈழ விடுதலை அமைப்பு தலைவர் உமா மகேஸ்வரன், டெலோ தலைவர் சிறிசபாரத்தினம் படுகொலைகளிலும், 1990ல் சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா மற்றும் அவரது சகாக்கள் 14 பேரை சுட்டுக் கொன்றது தொடர்பாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அதிபர் பிரேமதாசா, அதிபர் வேட்பாளர் காமினி திசநாயகா மற்றும் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் மற்றும் லட்சுமண் கதிர்காமர் ஆகியோர் படுகொலையிலும் பிரபாகரன் குற்றம்சாட்டப்பட்டார். 33 நாடுகள் விடுதலைப்புலிகள் மீது தடை விதித்தன. இன்டர்போலும் இவரைத் தேடியது.

**முப்படை அமைப்பு:** புலிகள் (தரைப்படை), கடற்புலிகள் (கடல் படை - 1984 ம் ஆண்டு முதல் பிரபாகரன் முயற்சி செய்ததன் விளைவாக 1992ல் உருவாக்கப்பட்டது) மற்றும் வான்புலிகள் (விமானப்படை) ஆகிய மூன்று படைகளையும் கொண்ட ஒரே போராளி அமைப்பு என்ற பெயரைப் பெற்றது. 1993ல் உயிரை துச்சமாக எண்ணி, ரகசியமாக தாக்கும் கரும்புலி தற்கொலை படையினரையும் பிரபாகரன் துவக்கினார்.

கடந்த, 2002ல் நோர்வே முயற்சியால் அமைதி முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்போது பிரபாகரன் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அமைதி முயற்சிகள் வழக்கம் போல் வெற்றி பெறவில்லை. இருதரப்பினர் இடையிலும் மோதல் தவிர்க்க முடியாதது ஆனது. 2005ல் ராஜபக்ஷ அதிபர் ஆனபின், நோர்வே அமைதி முயற்சி முற்றிலுமாக முடிவுக்கு வந்தது. புலிகள் ராணுவப்பிரிவில் இருந்த கருணா அம்மான், 2004 மார்ச்சில் பிரபாகரனிடமிருந்து விலகியது, அந்த அமைப்புக்கு பெரிய சவாலாக அமைந்தது.

கடந்த ஆண்டு இறுதியில், புலிகளின் கிழக்குப் பகுதியில் கடுமையாக சண்டை நடந்தது. 2009 புலிகளுக்கு சோகமானதாகவே இருந்தது. ஜனவரி 2ல், கிளிநொச்சியை ராணுவம் கைப்பற்றியது புலிகளுக்கு பெரிய அடியானது. ஜனவரி 25ல் முல்லைத்தீவை கைப்பற்றியது. வன்னியில் புதுக்குடியிருப்பு பகுதிக்குள் புலிகளின் எல்லையை ராணுவம் நெருக்கியது. இப்பகுதியில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் தமிழர்கள், இரு தரப்பு சண்டையில் சிக்கினர். பின் முள்ளிவாய்க்கால் தீபகற்ப பகுதியில் வேறு இடங்களுக்கு தப்ப முடியாத படி ராணுவம் நெருக்கியது.

இப்பகுதியில், பொதுமக்கள் மீதும் புலிகள் மீதும் ராணுவம் தாக்கியதில் நூற்றுக்கணக்கான புலிகள் மற்றும் அப்பாவி பொதுமக்கள் பலியாகினர். புலிகள் இருக்கும் இடத்துக்கு சில மீட்டர் தூரம் வரை சென்ற ராணுவம், தாக்குதல் நடத்தியதில் பிரபாகரன் மற்றும் அரசியல் பிரிவு தலைவர் நடேசன், பிரபாகரன் மகன் அந்தோணி மற்றும் பொட்டு அம்மான் உள்ளிட்டோர் பலியாகிவிட்டதாக இலங்கை ராணுவம் அறிவித்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் ஈழப் போராட்டத்தில் 70 ஆயிரம் பேர் பலியாகியிருக்கின்றனர். புலிகளின் வான்படை உருவாக காரணமாக இருந்த சார்லஸ் அந்தோணி பலியானது எப்படி என்பது குறித்து இலங்கை ராணுவம் தெரிவித்துள்ளது.

**இலங்கை ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கை:** புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் அதிகாலை ராணுவம் கடும் தாக்குதல் நடத்தியது. தாக்குதல் முடிவுக்கு வந்த பின், ராணுவ வீரர்கள் இங்கு தேடுதல் வேட்டை நடத்தினர். சண்டையில் பலியான புலிகளின் உடல்களை அடையாளம் காணும் பணி நடந்தது. இதில், 24 வயது மதிக்கத்தக்க சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது, புலிகள் தலைவர் பிரபாகரனின் மூத்த மகன் சார்லஸ் அந்தோணியின் சடலம் என தெரியவந்துள்ளது. புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் நடேசனும் சண்டையில் பலியானார். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சார்லஸ் அந்தோணி இறந்த நிலையில் இருப்பது போல் எடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தையும் இலங்கை ராணுவம் வெளியிட்டுள்ளது. சார்லஸ், ஏரோ நாட்டிகல் இன்ஜினியரிங் படித்தவர். புலிகள் வான்படையை உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்தவர். தகவல் தொடர்பு பிரிவையும் கவனித்து வந்தார். சண்டைகளை சார்லஸ் தான் தலைமையேற்று நடத்தியதாக தகவல்கள் வெளியாயின. அதேபோல், தமிழ்ச்செல்வன் மறைவுக்குப் பின் புலிகள் அரசியல் பிரிவு தலைவராக பதவியேற்றவர் நடேசன். இவர், இலங்கையில் முன்பு போலீஸ் கான்ஸ்டபிளாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை உயிருடன் கைது செய்ய முயன்றது இலங்கை ராணுவம். ஆனால் அவர் கடைசிவரை ராணுவத்திடம் சிக்கவில்லை என்று விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த மே 15, 2009ல் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களில் கூறப்பட்ட தகவலை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. அதில், விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட போரின்போது பிரபாகரனை உயிருடன் கைது செய்வதற்கு இலங்கை அதிபர் ராஜபக்ச உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் ராணுவத்தினருக்கு கடும் உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்கள். அதற்காக என்ன விலை கொடுக்கவும் அவர்கள் தயாராக இருந்தனர். அதன் காரணமாகவே போரின் இறுதிக்கட்டத்தில்பொதுமக்கள்இழப்புகுறித்து அரசாங்கமோ பாதுகாப்புப் படைகளோ கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. ஆனாலும் ராஜபக்சவுக்கும் அவரது சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாயவுக்கும் போர் களத்தின் உண்மையான நிலவரம் பற்றிய சரியான தகவல் ஒருங்கிணைப்பு கிடைக்கவில்லை. இதனால் இலங்கை அரசு விரும்பியதுபோல பிரபாகரன் உயிருடன் அராசங்கப் படைகளிடம் சிக்கவில்லை, என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், ஏப்ரல் 25, 2009ல் புலிகளுடனான போர் நிறுத்தத்துக்கு சம்மதிப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரிடம் ராஜபக்ச கூறியதாகவும், இந்தத் தகவல் இந்திய வெளியுறவுச்செயலர் நாராயணனுக்கு தெரியும் என்றும், ஆனால் கடைசி வரை அதனை வெளியிடாமலேயே விட்டுவிட்டதாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ள நிலையில், சர்வதேசப் பேச்சுக்களாக திம்பு முதல் டோக்கியோ தொடர்ந்து ஜெனிவா வரை தமிழர் போராட்டம் தொடர்பாகவும் தமிழ் மக்களின் இனப்படுகொலை தொடர்பாகவும் உலகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தொடர்பாகவும் முகவரியை எடுத்துத்தந்தவர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் என்பதும் குறிப்பிடத்தக்கவிடயம்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்மை எங்கு அழைத்துச் செல்லும்?

கடந்தவாரத் தொடர்ச்சி...

2 ஆம் பணி

இரண்டாவது பணியாக, புலிகள் விட்டுச்சென்ற ஏகபிரதிநிதித்துவ இடைவெளியை இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பு அப்படியே சுவீகரித்துக்கொண்டது. ஏகபிரதிநிதித்துவ அந்தஸ்த்தில் நின்றபடியே, தமிழர்களைக் கொன்றொழித்த இரத்த வெடிலோடு வந்துநின்ற சரத் பொன்சேகாவுக்குத் தமிழர்கள் வாக்களிக்க வேண்டுமெனவும் கூட்டமைப்பு கோரியது. 'தமிழ் சனங்கள் முட்டாள்கள்' என்பதை 2010இல் மீளவும் நிரூபித்திக் காட்டினார்கள். 2009இல் தமிழர்களை கொத்துக்கொத்தாகக் கொன்றொழிக்கப்பட மூல காரணமாக இருந்த ஒருவரை ஒரு வருடத்துக்குள் அவரால் காயப்படுத்தப்பட்ட அதே தமிழர்களைக் கொண்டு வாக்களிக்கச் செய்த பெருமையும் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் தமிழ் தேசிய கூட்டமைப்பையே சாரும்.

3ஆம் பணி

மூன்றாவது பணி எதுவெனில், தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற கட்சிகளின் கூட்டை வலுவற்றதாக்கி, இரா.சம்பந்தன் தலைமை வகித்த தமிழரசுக் கட்சியை முதன்மை நிலைக்கு கொண்டு வருவதே ஆகும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னமான வீடு தமிழரசுக் கட்சியிடம் கடன் வாங்கியதாக இருந்தமையினால், அவ்வாறு தமிழரசுக் கட்சியை முதன்மை நிலைக்குக் கொண்டு வருவதில் பெரிய சிரமங்களும் இருக்கவில்லை. இரா.சம்பந்தனின் விசுவாசிகளாக இருந்த புதியவர்கள் இதற்கு உள்ளும் புறமுமாக உழைத்தனர் என்பதும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒன்று. தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இருக்கின்ற கட்சிகளுக்குள் தமிழரசுக் கட்சி மட்டும் மேலிருந்து கீழ் நோக்கி தீர்மானிக்கும் சக்தியாக மாறிவருவதை, அதற்குள் இருக்கின்ற ஏனைய கட்சிகள் விரும்பவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் பிரதானி சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்த விடயத்தில் அடிக்கடி கிளர்ந்தெழுந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என தமிழரசு கட்சி தவிர்ந்த அனைத்துக் கட்சிகளும் கோரி நின்றன. தமிழ் மக்களுக்கு விளக்கமற்ற கட்சி பதிவு விடயத்தைத் திட்டமிட்டே ஓரங்கட்டி வந்தார் இரா.சம்பந்தன்.

அதற்குப் பிரதான காரணம் இன்றிருக்கின்ற பெரும்பாலான தமிழர்களுக்கு, 'வீடு' என்ற அரசியல் குறியீட்டையும் தமிழ் தேசிய கூட்டமைப்பையும் பிரித்துப் பார்க்கத் தெரியாது. அவர்களைப் பொறுத்தவரையில் புலிகளால் உருவாக்கப்பட்டு, புலிகளின் நினைவு எச்சமாக மிஞ்சியிருப்பது தமிழ் தேசிய கூட்டமைப்பும், அதன் சின்னமான வீடும் மட்டும் தான். அவர்களுக்கு கூட்டமைப்பென்பது தனியொரு கட்சி. வீடு கூட்டமைப்பின் சின்னம் என்றே அர்த்தப்படுத்தி வைத்திருக்கிறார்கள். 2009ஆம் ஆண்டுடன் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவு அறுந்த வரலாறு எல்லாம் சாதாரண வாக்காளர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கவில்லை. அதனைச் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் அச்சு ஊடகங்களுக்கு இருந்தது. ஆனால், அதனை எந்த ஊடகங்களின் நிகழ்ச்சிநிரலிலும் கூட்டமைப்பின் உண்மைதன்மையை வெளிப்படுத்தும் விடயம் உள்ளடங்கவில்லை. தமிழ் அச்சு ஊடகங்களின் சீழ் வடியும் அவலமான பக்கங்களில் இதுவும் ஒன்று.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்தி, அதிகாரமிக்க சக்தியாக முன்னிறுத்தும் வேலைத்திட்டங்கள் நடந்தாலும், இதுவரை அந்தக் கட்சி கூட்டமைப்பை விட்டு வெளியேற விரும்பவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறி, தமிழரசுக் கட்சியின் அடையாளத்தோடு வாக்கு கேட்டு மக்களிடம் வந்தால் இலகுவில் தோற்றுவிடுவோம் என்பதை அதன் தலைமைகள் தெளிவாகவே உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், காலப்போக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பை மறக்கச் செய்து தமிழரசுக் கட்சியை ஆழப் பதிய வைக்க முடியும் என்பதில் அந்தக் கட்சியின் தலைமை அசையாத நம்பிக்கை கொண்டிக்கின்றது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

4ஆம் பணி

2010ஆம் ஆண்டுக்குப் பின்னரான தமிழ் தேசிய கூட்டமைப்பின் நான்காவது பணியாக அமைவது, கடந்த கால போராட்டங்கள், இழப்புகள், தியாகங்கள், சொத்திழப்புகள் அனைத்துக்குமான நீதி பெறுதலைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்கிற கோசத்தை தமிழ் தேசியத்தின் அரசியலாக்குவது. அதாவது, சர்வதேச ரீதியிலும், உள்ளக ரீதியிலும் இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அரசியல் நடைமுறைகளைக் கைவிடுவது என்ற நிலைப்பாட்டுக்கு கூட்டமைப்பு வந்துள்ளதை கடந்த 4 வருட அவதானிப்புகள் உறுதிப் படுத்தியிருக்கின்றன. இதனைப் பல்வேறு கிளையாகப் பிரித்து நோக்கலாம்.

முதலாவதாக, ஐக்கிய இலங்கை என்பதை கேள்விக்குட்படுத்தும் அனைவரையும், அனைத்தையும் அரசியலிலிருந்தே ஓரங்கட்டும் பணியை மேற்கொள்கின்றனர். உதாரணமாகக் காணாமல்போனோர் விடயத்தை முன்னிலைப்படுத்தி செயற்பட்டுவரும் அனந்தியை புறக்கணித்தமை, இனப்படுகொலை தொடர்பான விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு வரும் சிவாஜிலிங்கத்தைப் புறக்கணித்தமை, வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் இனப்படுகொலை தொடர்பிலான தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் அவர் தொடர்பில் தமிழரசுக் கட்சியினரும், இரா. சம்பந்தனும் வெளியிட்டுவரும் கருத்துக்கள் என்பன இதற்கு எடுத்துக்காட்டுக்களாக அமைவன.

சர்வதேச ரீதியில் இலங்கையைத் தண்டனைக்கு உட்படுத்தும், தமிழர் சார்பில் நீதி கோரும் செயற்பாடுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் செயற்றிட்டங்களையும் கூட்டமைப்பு செய்துவருகின்றது. போர் முடிந்த கையுடன் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கூட்டத் தொடர்களில் தமிழர்கள் சார்பாகக் கலந்துகொள்ள வாய்ப்புக்கள் இருந்தபோதும் அதனைப் புறக்கணித்தது கூட்டமைப்பு. இதுகுறித்து கேள்விகேட்டவர்களிடம், நாடுகள் கூடி கலந்துரையாடி முடிவுகள் எடுக்கும் இடத்தில் ஒரு கட்சியினராகிய நாம் கலந்துகொண்டு எதுவும் செய்ய முடியாதென இலகுவாக விளக்கம் சொன்னார் சுமந்திரன். மிகவும் பலமான தரப்பொன்றினால் பாதிப்புக்குள்ளான ஒரு தரப்பு தனக்கு நீதி தேவைப்படின் அதனை நோக்கி போகவேண்டுமே தவிர, பாதிக்கப்பட்ட தரப்பை நோக்கி யாரும் ஓடிவரப்போவதில்லை என்கிற அடிப்படை அறிவு கூட இல்லாமல் இந்தத் தருணத்தில் கூட்டமைப்பு செயற்பட்டது.

தொடரும்...

ஜெரா

# "மலையக" தேசிய அடையாளத்தின் - பரிணாமங்களும், பரிமாணங்களும்

கடந்தவாரத் தொடர்ச்சி...

ஆனால் ஜே.வி.பியினர் இந்திய வர்த்தக - வியாபார சக்திகளைத் தான் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் கொழும்பு வாழ் இந்திய வம்சாவளியினர் இவர்கள் மட்டும் தானா? ஒட்டுமொத்த கொழும்பு வாழ் இந்திய வம்சாவளியினரில் இவர்களின் வீதம் என்ன? இன்றும் கொழும்பு வாழ் உழைக்கும் வர்க்க இந்திய வம்சாவளி மக்களை இந்திய தரகு முதலாளித்துவ மேட்டுக்குடிகளாக நிறுவ முற்படுவதும் ஜே.வி.பி போன்ற சக்திகள் கொண்டிருந்த முட்டாள்தனமான அணுகுமுறைக்கு ஒப்பானது.

மேற்படி "இந்திய வம்சாவளி" அடையாளத்தை பேண முனையும் சக்திகள் இல்லாமலில்லை. ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் மிகச் சிறுபான்மையினரே. ஆனால் மலையகத்துக்கு வெளியில் (குறிப்பாக கொழும்பைச் சூழ) வாழ்ந்துவரும் பெருவாரி இந்திய வம்சாவளி மக்கள் என்ன பணக்காரர்களா? உயர் சாதியினரா? வியாபார / வர்த்தகர்களா? அல்லது இந்திய தொடர்பைத் தான் பேணுபவர்களா? நிச்சயமாக இல்லை. மலையகத்துக்கு வெளியில் வாழும் லட்சோப இந்திய வம்சாவளி மக்கள் சாதாரண உழைக்கும் வர்க்கத்தினர். ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள். குறிப்பாக கொழும்பு வாழ் மக்களைக் குறிப்பிடலாம். இந்தியத் தொடர்பற்றவர்கள்.

இந்திய வம்சாவளியினராக மலையகத்தில் இருந்த பல அரசியல் பிரச்சினைகளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளும் இவர்களுக்கும் இருந்தது. பிரஜாவுரிமை பறிப்பு, வாக்குரிமைப் பறிப்பு, நாடற்றவர்களாக ஆக்கப்பட்டமை, நாடுகடத்தும் ஒப்பந்தங்களின் மூலம் நாடு கடத்தப்பட்டமை, கலவரங்களில் பாதிக்கப்பட்டமை, அதன் காரணமாக அகதிகளாக ஆனமை, இடம்பெயர்வு, அகதிகளாக இந்தியா திரும்பியமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை இவர்களும் அதே அளவில் எதிர்கொண்டவர்கள்.

மேலதிகமாக, பெருவாரி சிங்களவர்கள் வாழ்ந்த பகுதிகளில் அங்கே தமிழ் மொழிப் பாடசாலை அற்ற நிலையும், தமது சமய பண்பாட்டை வளர்த்துக்கொள்ள வழியின்றியும் தமக்கான பண்பாட்டை பேண வழியின்றி தமது அடையாளத்தை இழந்து சிங்களவர்களாக கரைந்துவிட்டவர்களும் கணிசமான எண்ணிக்கையைக் கொண்டிருக்கிறார்கள். பெருவாரி மக்கள் சேரிகளிலும் முடுக்குகளிலும் வாழ்பவர்கள். குறிப்பாக அரசியல் ரீதியில் அநாதரவாக நீண்ட காலம் தனித்துவிடப்பட்டவர்கள். வேறு வழியின்றி சிங்கள பெரும்பான்மை அரசியல் சக்திகளில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள். மலையக அரசியல் நிகழ்ச்சிநிரலில் இருந்து நெடுங்காலமாக அக்கறை காட்டப்படாதவர்களும் கூட. அதனால் ஏனைய சமூகங்களுடன் கலந்துவிட்டவர்கள். கணிசமானவர்கள் சிங்கள வர்களாகவே ஆகிவிட்டவர்கள். மேல்மாகாணத்தில் தமிழ் பாடசாலைகள் மூடப்பட்ட வேளையிலும், அதன் வசதிகள் குறைக்கப்பட்ட வேளைகளிலும் எந்த தமிழ் தரப்பும் வந்தும் மீட்டதில்லை. மிக அரிதான சந்தர்ப்பங்களை வேண்டுமென்றால் கூறிக்கொள்ள முடியும். ஆனால் ஒரு கூட்டு அரசியல் பிரக்ஞையாக அது நிகழ்ந்ததில்லை. 80களின் பின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கொழும்பில் தளமமைத்து பணியாற்றியதை எவராவது உதாரணத்துக்கு காட்டக்கூடும், ஆனால் அது கூட ஒட்டுமொத்த இந்திய வம்சாவளியினரை அரசியல் ரீதியில் இணைக்கின்ற அரசியல் திட்டமாக நிகழவில்லை. ஏனோ தேர்தல் அரசியலுக்கு தேவைப்படுகிற வாக்குவங்கிக்காக சில சேவைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை உறுதியாகக் கூற முடியும்.

மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினர் தமக்கான பண்பாட்டையோ, மொழியையோ, மரபையோ, அபிலாசைகளையோ பேணுவதற்கான அரசியல் சக்தியாகவோ, சமூகத் திரட்சியாகவோ இருக்க முடியாமல் போனதற்கு காரணங்கள் என்ன? கூட்டாக சமூக சக்தியாக தம்மை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசியல் தலைமையோ, வழிநடத்துவதற்கு ஒரு அரசியல் திட்டமோ, நிழ்ச்சிநிரலோ இருந்தது கிடையாது என்பதை "மலையக அடையாளம்" கோரும் சக்திகள் சுயவிமர்சனமாக ஏற்றுக்கொண்டாக வேண்டும். மலையக அரசியலானது தொழிற்சங்க அரசியலில் இருந்து, தேசிய அரசியலுக்கு பரிமாற்றம் அடைந்த காலத்தில் இதை சரிசெய்ய இ.தொ.கா தவறிவிட்டது என்று தப்பிவிடத்தான் முடியுமா?

**சிங்களத் தரப்பின் முதலாவது துரோகம் தொடங்கிய இடம்:**

ஒன்றை இங்கு முக்கியமாக நினைவிற்கொள்ள வேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் முதலாவது துரோகம் எனப் பார்க்கப்படுவது 1918 ஆம் ஆண்டு இலங்கை தேசிய சங்கம் ஆரம்பிக்கும் போது அருணாச்சலத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம். மேல்மாகாணத் தமிழர்களுக்கு ஒரு பிரதிநிதித்துவத்தை தருவதாக ஒப்புக்கொண்டுவிட்டு பின்னர் ஏமாற்றிய கதையையும், அதனால் இலங்கை தேசிய காங்கிரசின் முதல் தலைவரான சேர்.பொன் அருணாச்சலம் அதில் இருந்து விலகிய கதையையும் நாம் அறிவோம். அந்த மேல் மாகாண மக்கள் யார். இந்த பெருவாரி இந்திய வம்சாவளி மக்கள் அன்றி வேறு யார்.

அந்தளவுக்கு நூறாண்டுக்கு முன்னரே இம்மக்களின் எதிர்காலம் பற்றிய சர்ச்சை அரசியல் களத்துக்கு வந்திருக்கிறது. தேசிய காங்கிரசின் துரோகத்தோடு அந்த விவகாரமும் நெடுங்காலமாக கைவிடப்பட்டிருக்கிறது. 2000 ஆம் ஆண்டுகளில் இந்த அரசியல் இடைவெளியை நிரப்பவென வந்த மனோ கணேசனின் நிகழ்ச்சி நிரலும் காலத்துக்கு காலம் வெவ்வேறு அரசியல் நிகழ்ச்சிநிரலால் மடைமாற்றப்பட்டதால் இம்மக்களின் அரசியல் அப்படியே நீர்த்துப் போனதுடன் கூடவே இலங்கைவாழ் சகல இந்திய வம்சாவளி மக்களையும் இணைக்க கிடைத்த வாய்ப்பும் தவறவிடப்பட்டிருக்கிறது.

இன்றைய நிலையில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவளியினர் இலங்கையர்களாக பதிவு செய்யப்பட்டுவிட்டார்கள் என்கிற கருத்தை சமீபத்தில் பேராசிரியர் சந்திரபோசும் குறிப்பிட்டிருந்தார். இதில் பெருவாரி மக்கள் நிச்சயம் மலையகத்துக்கு வெளியில் வாழ்பவர்களாக இருக்க நிறைய வாய்ப்புண்டு. உண்மைதான் "இந்திய வம்சாவளியினர்" என்கிற அடையாளத்தை சுமக்க மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினர் விரும்பவில்லை என்பதை எவரிடம் உரையாடினாலும் உணர்ந்துகொள்ள முடியும். அப்படி அவர்கள் தள்ளப்பட்டதற்கு கடந்தகால "நாடு கடத்தல்" பற்றிய அச்சமும் ஒரு காரணம் என்பது முக்கிய காரணம் தான். ஆனால் அதேவேளை அவர்களுக்கு இருந்த மாற்றுத் தெரிவு தான் என்ன?

"மலையகத்தவர்" என்று அவர்கள் ஏன் அடையாளப்படுத்திக் கொண்டிருக்கக்கூடாது" என்று கேட்கும் அந்த "எல்லாம் அறிந்த அறிவாளிகள்" யார்? பெருந்தோட்ட தமிழர்களை மலையகத் தமிழர் என்றால், மற்றவர்களை நகரத் தமிழர்கள் என்றும், ஏனையோரையும் அந்தந்த பிரதேசத்துக்குரிய அடைமொழியுடன் அழைப்போமா என்று சமீபத்தில் ஒரு வலைத்தளத்தில் கேட்கப்பட்டிருந்த கேள்வியில் உள்ள ஆழத்தையும் உணரவேண்டியிருக்கிறது.

"மலையக மக்கள்" என்கிற சொல்லாடலுக்கான அர்த்தத்தை மலையகத்துக்கு வெளியில் வாழும் மக்களிடம் விளக்கி ஒப்புதலை பெறட்டும். மலையகத்துக்கு வெளியில் ஒரு ஆயிரம் பேரின் ஒப்புதலைக் கூட பெறுவது இலகுவல்ல. ஒரு இன அடையாளத்தை திணித்து வென்றதாக உலகில் எந்த வரலாறும் இல்லை. அப்படி ஒரு புதிய வரலாற்றை எவராலும் படைத்துவிடவும் முடியாது. அவர்களுக்கு வெளியில் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு அடையாளத்தை அவர்களுக்கு சூட்டுவது அறிவுபூர்வமான காரியமா? நடைமுறை சாத்தியமான காரியமா? அப்படி செய்வதாக இருந்தால் கூட அதனை ஏற்கச் செய்வதற்கான படிநிலை முயற்சிகள் பலவற்றைத் தாண்ட வேண்டுமல்லவா? இது எதுவுமல்லாமல் இன்று கும்பல் பாணியில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெகுஜன ஒப்புதலற்ற தன்முனைப்பிலான ஒரு ஆர்வக்கோளாறு முயற்சி நடக்கிறது.

தொகைமதிப்பிலிருந்து இன அடையாளம் நீக்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்கிற பீதியைக் காட்டியே இந்த முயற்சி நடக்கிறது. அந்த அச்சம் நியாயமானதே. அதற்கு இந்த குறுக்குவழி தீர்வாகிவிடமுடியுமா? "இந்திய வம்சாவளி" என்கிற அடையாளத்துக்கு ஒரு "மாற்று" அவசியம் என்பது உண்மையே. அந்த "மாற்று" அனைத்து மக்களும் ஏற்கக்கூடியதும், விஞ்ஞானபூர்வமானதுமாக இருத்தல் முன்நிபந்தனை அல்லவா?

**இலங்கையில் "தமிழர்" அடையாளம்**

இந்திய வம்சாவளித் தமிழரென்றால் அது மலையகத்தில் உள்ளவர்கள் தான் என்றும், பெருந்தோட்டத்துறைக்கு வந்தவர்கள் மட்டும் தானென்றும் ஒரு கருத்து மிக ஆழமாக பலர் மத்தியில் குறிப்பாக மலையகத் தமிழர் மத்தியில் பதிய வைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமன்றி மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினர் என்போர் வியாபார வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் உயர் வர்க்கத்தினர் என்றும், உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் என்கிற கருத்தும் பிரச்சாரப்படுத்தப் பட்டுவந்திருக்கிறது. இவர்களின் சொத்துக்களைப் பேணிக்கொண்டு இந்தியாவுடன் வர்த்தக நலன்களை அனுபவித்துக்கொண்டு இந்தியாவினதும், இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் சலுகைகளை அனுபவிப்பதற்காக அவர்களுக்கு இந்திய அடையாளம் தேவைப்படுகிறது என்கிற கதையையும் பரப்பி வருகிறார்கள். இந்த புனைவுகளைப் பரப்பிவருபவர்களின் பத்தாம்பசலித் தனமான கருத்துக்களுக்கு இப்போது "மலையக அடையாள"த் தேடல் பற்றிய உரையாடல் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

**I. பேராசிரியர் சிவத்தம்பியின் கருத்தை திரித்தல்**

2023 யூலை 22 அன்று கொழும்பில் நிகழ்ந்த மலையகம் 200 தொடர்பான ஆய்வரங்கமொன்று கொழும்பில் நிகழ்ந்தது. நான் அங்கே இதே மலையக அடையாளம் பற்றிய உரையை ஆற்றினேன். எனது உரைக்கு பின்னர் அங்கே உரையாற்றியவர்களில் இதைவிட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜாவும் ஒருவர். அங்கே எனது உரைக்கு பதிலளிக்குமுகமாக திலகராஜா மலையக அடையாளத்துக்கான அவரின் கருத்துக்களையும் முன்வைத்திருந்தார். அந்த கருத்துக்களுக்கு எனக்கு பதில் அளிக்கும் வாய்ப்பு அந்தக் கூட்டத்தில் இருக்கவில்லை. இதே கருத்தை அப்படியே ஓகஸ்ட் 15ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான் ஆற்றிய உரைக்குப் பின்னர் அவர் வெளியிட்டிருந்தார். அங்கேயும் பதில் வைப்பதற்கான சூழல் அமையவில்லை. அவரின் உரை பின்னர் "அபத்தம்" இதழிலும் 2013 சாகித்திய விழா மலரிலும் கட்டுரையாக வெளிவந்திருந்தாலும் அதற்கு எதிர்வினை இல்லாவிட்டால் அக்கருத்தை பலர் ஏற்றுக்கொள்ள வாய்ப்பு இருப்பதாலும் அக்கருத்தை இங்கே முன் வைக்கிறேன்.

பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்ட ஒரு கருத்தை முதலில் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

"இலங்கைத் தமிழ் வழக்கில் இன்று மலையகம்" எனும் தொடர் இலங்கையின் மலைப் பிரதேசங்களிலுள்ள பெருந் தோட்டங்களிலும் அவற்றைச் சார்ந்த நகரங்களிலும் வாழும் இந்திய வம்சாவழித் தமிழரைக் குறிப்பதாகும். மலையகப் பகுதிகளைச் சாராத பகுதிகளிலுள்ள பெருந்தோட்டங்களில், அதாவது மேல், தென் மகாணங்களைச் சார்ந்த றப்பர் பெருந்தோட்டங்களில் வாழ்பவர்களையும் மலைசார் பகுதிகளிலிருந்து சென்று வடகிழக்கு பகுதியின் விவசாயப் பிரதேசங்களிலும் (கிளிநொச்சி, வவுனியா, மாவட்டங்களில்) கொழும்பிலும் வாழ்பவர்களையும் கூட "மலையகத் தமிழர்" என்ற தொடர் கொண்டே சுட்டும் மரபு இன்று வழக்கிலுள்ளது." நான் சொல்லவில்லை பேராசிரியரே கூறிவிட்டார்" என்று அங்கே அவர் குறிப்பிட்டார்.

இங்கே பேராசிரியர் முடிக்கும் போது அவரின் கருத்தாகக் குறிப்பிடவில்லை. "சுட்டும் மரபு இன்று வழக்கிலுள்ளது" என்கிறார். "வழக்கில் உள்ளது" என்று தான் அவர் குறிப்பிடுகிறார். அந்த நூலை அவர் எழுதிய 90களின் ஆரம்பம் என்பது மலையக வரலாற்றிலேயே மலையகத் தேசியம் குறித்த கருத்தாக்கம் எழுச்சியுற்ற காலம். மலையகத் தேசியம், மலையக அதிகார அலகு, மலையக சுயநிர்ணய உரிமை என்கிற கருத்தாக்கம் பரவலாக்கப்பட்ட காலம். இதனை முன்னெடுத்தவர்களில் பிரதானமானவர்கள் மலையக மக்கள் முன்னணியினர். அதன் தலைவர்கள் அப்போது தான் சிறையில் இருந்து வெளியேறிய காலம். அவர்களின் ஆதரவாளனாக பணியாற்றிய காலம் அது. சந்திரசேகரனும் நானும் தனிப்பட மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினரின் தேசிய அடையாளம் பற்றி உரையாடிய போது இறுதியில் அனைவரையும் மலையக அடையாளத்துக்குள் கொண்டு வருவதே சரியானது என்கிற கருத்தை வலுவாக முன்வைத்த போது அது சரி என நம்பினேன். அதையே நாம் இனி வலியுறுத்த வேண்டும் என ஒப்புகொண்டமைக்குக் காரணம் அக்கருத்தாக்கத்தை விரைவில் பரவலாக்கி அனைவரையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிலை உருவாகி விடும் என்று உறுதியாக அன்று நம்பியது தான். அதனை அவர்கள் முன்கொண்டு செல்வார்கள் என்று நம்பியது தான்.

**தொடரும்...**

**- என்.சரவணன் -**

# விளையாட்டுச் செய்திகள்

## பதிவுகளை இடைநிறுத்தி வர்த்தமானி அறிவித்தல்



இரண்டு விளையாட்டு சங்கங்கள் மற்றும் 03 விளையாட்டு சம்மேளனங்களின் பதிவுகளை தற்காலிகமாக இடைநிறுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1973 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டம் திருத்தம் மற்றும் 32 ஆவது சரத்தின் கீழ் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

**இடைநிறுத்தப்பட்ட விளையாட்டு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள் பின்வருமாறு:**

இலங்கை வில்வித்தை சங்கம்
இலங்கை கபடி சம்மேளனம்
இலங்கை மல்யுத்த சம்மேளனம்
இலங்கை பிரிஜ் சம்மேளனம்
இலங்கை தேசிய சக்கர காலணி சங்கம்

## 28 வயதிலேயே 500 விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்



தென் ஆபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் கசிகோ ரபாடா, சர்வதேச கிரிக்கெட்டில் 500 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். செஞ்சுரியனின் Super Sport Park மைதானத்தில் இந்தியா, தென் ஆபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி தொடங்கியது.

நாணய சுழற்சியில் வென்ற தென் ஆபிரிக்கா பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி இந்திய அணி முதலில் களமிறங்கியது. 24 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய அணியை விராட் கோலி, ஷ்ரேயாஸ் ஐயர் மீட்க போராடினர். ஆனால், ககிசோ ரபாடா (Kagiso Rabada) தனது மிரட்டலான பந்துவீச்சில் ஷ்ரேயாஸ் (31) மற்றும் கோலி (38) இருவரையும் வெளியேற்றினார்.

அதனைத் தொடர்ந்து அவரது துல்லியமான பந்துவீச்சில் அஷ்வின் (8), ஷர்துல் தாக்கூர் (24) ஆகியோரும் ஆட்டமிழந்தனர். எனினும் கே.எல்.ராகுல் பொறுப்புடன் ஆடி அரைசதம் விளாசினார். இந்திய அணி முதல் நாள் முடிவில் 8 விக்கெட்டுக்கு 208 ஓட்டங்கள் எடுத்தது. ரபாடா 5 விக்கெட்டுகளும், பர்கர் 2 விக்கெட்டுகளும், ஜென்சென் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். கே.எல்.ராகுல் 70 ஓட்டங்களுடனும், சிராஜ் ஓட்டங்கள் எடுக்காமலும் களத்தில் இருந்தனர். இந்த நிலையில் காகிசோ ரபாடா சர்வதேச கிரிக்கெட்டில் 500 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை பட்டியலில் இணைந்துள்ளார். இதுவரை 6 தென் ஆபிரிக்க வீரர்கள் இந்த மைல்கல்லை எட்டிய நிலையில், 28 வயதாகும் ரபாடா 7வது வீரராக இணைந்துள்ளார்.

## சிம்பாப்வே - இலங்கை போட்டித் தொடரின் நுழைவுச் சீட்டு

அடுத்த வருடம் நடைபெறவுள்ள சிம்பாப்வே - இலங்கை அணிகளுக்கு இடையிலான போட்டி தொடரின் நுழைவு சீட்டுக்கள் தற்போது வெளியாகியுள்ளன.

www.srilankacricket என்ற இணையத்தளத்திற்குச் சென்று டிக்கெட்டுகளை பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை கிரிக்கெட் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிக்கெட் கவுன்டர் ஜனவரி 4 முதல் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் திறக்கப்படும்.

அதன்படி, கிராண்ட்ஸ்டாண்ட் வகை டிக்கெட் ரூ.5,000க்கு விற்கப்படுகிறது.

இந்தப் போட்டித் தொடர் 3 டி20 போட்டிகள் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளை கொண்டதாகும்.

ஜனவரி 6, 8 மற்றும் 11 ஆம் திகதிகளில் பகல் மற்றும் இரவு போட்டிகளாக ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. 14, 16, 18 ஆகிய திகதிகளில் டி20 போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்த இரண்டு போட்டிகளும் கொழும்பு ஆர் பிரேமதாச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.



## IPL இல் பங்கேற்பது சந்தேகம்



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் முஜீப் உர் ரஹ்மான், நவீன் உல் ஹக், ஃபஸல்ஹக் ஃபரூக்கி ஆகியோருக்கு அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அடுத்த 2 ஆண்டுகளுக்கு தடையில்லாச் சான்று (என்ஓசி) வழங்காது எனத் தெரிவதால், எதிர்வரும் ஐபிஎல் சீசனில் அவர்கள் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது. லீக் போட்டிகளில் பங்கேற்பதற்காக, தேசிய அணிக்கான மத்திய ஒப்பந்தத்திலிருந்து விலக அவர்கள் விருப்பம் தெரிவித்ததை அடுத்து, இதுகுறித்து விசாரிப்பதற்கான பிரத்யேக குழு ஒன்றை ஆப்கானிஸ்தான் வாரியம் அமைத்துள்ளது.

இது தொடர்பாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, ஆப்கானிஸ்தான் அணிக்காக விளையாடுவது, தேசிய பணியாகும். ஆனால், முஜீப் உர் ரஹ்மான், நவீன் உல் ஹக், ஃபஸல்ஹக் ஃபரூக்கி ஆகிய மூவரும் தேசிய அணியில் விளையாடுவதற்கு பதிலாக, தனிப்பட்ட லாபத்துக்காக வர்த்தக ரீதியிலான லீக் போட்டிகளில் விளையாட விரும்புகின்றனர். அதன்பேரில் ஆப்கானிஸ்தான் வாரியத்துடனான மத்திய ஒப்பந்தத்தை ஏற்க மறுக்கின்றனர்.

ஜனவரி 1 முதல் அமுலாகும் புதிய ஒப்பந்தத்தில் இருந்து தங்களை விலக்கிக் கொள்ள நினைப்பதால், அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இந்தவிவகாரம் தொடர்பாக முழுமையாக விசாரித்து, தகுந்த பரிந்துரைகளை வாரியத்தின் தலைமைக்கு வழங்கும் வகையில் பிரத்யேக குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் வாரியத்தின் புதிய மத்திய ஒப்பந்தத்திற்கு அவர்கள் தகுதியற்றவர்களாகின்றனர். அவர்களுக்கான தடையில்லாச் சான்று உடனடியாக ரத்து செய்யப்படுகிறது. வரும் நாள்களில் போட்டிகளின்போது தேசிய அணியில் அவர்கள் பங்கேற்பது தொடர்பாக, தேவையின் அடிப்படையில் வாரியம் முடிவெடுக்கும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஐபிஎல் தொடரில் எதிர்வரும் சீசனுக்கான ஏலத்தில் முஜீப் உர் ரஹ்மான் ரூ.2 கோடிக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸால் வாங்கப்பட்டார். நவீன் உல் ஹக்கை லக்னௌ சூப்பர் ஜயன்ட்ஸும், ஃபஸல்ஹக் ஃபரூக்கியை சன்ரைசர்ஸ் ஹைதராபாதும் தக்கவைத்துள்ளது நினைவுகூரத்தக்கது. இதனிடையே, வரும் ஜனவரியில் இந்தியா - ஆப்கானிஸ்தான் மோதும் 3 ஆட்டங்கள் கொண்ட டி20 தொடர் ஜனவரி 11, 14, 17 திகதிகளில் முறையே மொஹாலி, இந்தூர், பெங்களூரில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அணியில் மீண்டும் கோலி

இந்திய கிரிக்கெட் அணி தென் ஆபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறது. இரு அணிகள் மோதும் 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் ஆட்டம் தொடங்கியுள்ளது. இதற்கிடையே இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் விராட் கோலி, தனிப்பட்ட குடும்ப விஷயம் காரணமாக தாயகம் திரும்பினார் என்று தெரிவிக்கப்பட்டது.



அவர் முதல் டெஸ்ட் போட்டிக்கு முன்பாக அணியுடன் இணைவார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் விராட் கோலி, தென் ஆபிரிக்காவில் உள்ள இந்திய அணியுடன் மீண்டும் இணைந்தார். அவர் டெஸ்ட் போட்டிக்கான பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். கடந்த 15 ஆம் திகதி இந்தியாவில் இருந்து தென் ஆபிரிக்காவுக்கு சென்ற கோலி, பயிற்சிகளை மேற்கொண்டார். பின்னர் அங்கிருந்து 19 ஆம் திகதி லண்டன் சென்றதாக தகவல் வெளியாகி உள்ளது.

## உலகக்கோப்பைக்கு குறி வைத்த இங்கிலாந்து – பொல்லார்ட் நியமனம்

மேற்கிந்திய தீவுகளின் ஜாம்பவான் வீரர் கீரன் பொல்லார்ட் இங்கிலாந்து அணியின் துணை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். 2023 ஒருநாள் உலகக்கோப்பையில் படுமோசமாக செயல்பட்ட இங்கிலாந்து அணி, 9 போட்டிகளில் விளையாடி 3 வெற்றிகளை மட்டுமே பெற்று வெளியேறியது.

நடப்பு சாம்பியனாக இருந்த இங்கிலாந்து அணியின் ஆட்டம் ரசிகர்களுக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் அளித்தது.

இதனைத் தொடர்ந்து, அடுத்த ஆண்டு அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் டி20 உலகக்கோப்பை நடைபெற உள்ளது. இன்னும் 6 மாதங்களே உள்ள நிலையில், இதற்காக ஒவ்வொரு அணியும் தயாராகி வருகின்றன. இதனால், மேற்கிந்திய தீவுகளின் மைதானங்களின் சூழல், Pitchயின் செயல்பாடுகள் குறித்து கவனம் கொண்டுள்ள இங்கிலாந்து அணி நிர்வாகம் கீரன் பொல்லார்ட்டை துணை பயிற்சியாளராக நியமித்துள்ளது.

# உலக வலம்

## ரஷ்யா மற்றும் அமெரிக்கா கூட்டு நீடிப்பு




ரஷ்யா மற்றும் அமெரிக்க விண்வெளி ஏஜென்சிகள் குறைந்தபட்சம் 2025 வரை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) கூட்டாக குழுக்களை அனுப்புவதற்கு ஒத்துழைக்க ஒப்புக்கொண்டுள்ளன என்று ரஷ்ய நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் தெரிவித்துள்ளது.

ரஷ்ய விண்கலத்தின் குழுவினரின் ஒரு பகுதியாக ஒரு அமெரிக்க விண்வெளி வீரரையும். ஒரு அமெரிக்க குழுவினரின் ஒரு பகுதியாக ஒரு ரஷ்ய விண்வெளி வீரரையும் அனுப்புவதை உள்ளடக்கியது. பெப்ரவரி 2022 இல் உக்ரைனின் முழு அளவிலான படையெடுப்பை ரஷ்யா தொடங்கியதிலிருந்து மாஸ்கோவும் வாஷிங் டனும் தொடர்ந்து இணைந்து செயல்படும் சில பகுதிகளில் விண்வெளித் துறையும் ஒன்றாகும்.

ரஷ்யப் பிரிவில் ரோஸ்கோஸ்மோஸின் குறைந்தபட்சம் ஒரு பிரதிநிதியாவது இருப்பதையும். அமெரிக்கப் பிரிவில் NASA இன் குறைந்தபட்சம் ஒரு பிரதிநிதியாவது இருப்பதையும் உத்தரவாதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என Roscosmos தனது அறிக்கையில் கூறியுள்ளது.

அமெரிக்கா. ரஷ்யா. ஐரோப்பா. கனடா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இதுவரை சுற்றுப்பாதை ஆய்வகத்தை 2024 வரை மட்டுமே செயல்பாட்டில் வைத்திருக்கின்றன. இருப்பினும் அமெரிக்கா 2030 வரை தொடர விரும்புகிறது. ரஷ்யா. அதன் பங்கிற்கு. 2024க்குப் பிறகு விலகுவதாக முன்னர் கூறிய பின்னர். 2028 வரை ஈடுபட விரும்புவதாக ஏப்ரல் மாதம் கூறியது. மைக்ரோ கிராவிட்டி மற்றும் விண்வெளி சூழல் சோதனைகளை மேற்கொள்ள வடிவமைக்கப்பட்ட ISS. சராசரியாக 400 கிலோமீட்டர் (250 மைல்) உயரத்தில் பூமியைச் சுற்றி வருகிறது. இது ஒரு நாளைக்கு 15.5 சுற்றுப்பாதைகளை நிறைவு செய்து. உலகத்தை சுற்றி வர 93 நிமிடங்கள் மட்டுமே தேவைப்படுகிறது.

## விமானத்தை கண்டுபிடிக்க புதிய முயற்சி




2014ல் கோலாலம்பூரில் இருந்து மலேசியா நோக்கி பயணத்தை ஆரம்பித்த எம்.எச்.370 என்ற விமானம் கடந்த 2014 ஆண்டு மார்ச் 8-ம் திகதி ரேடார்களில் இருந்து காணாமல் போனது.

ரேடார்களிலிருந்து மாயமான எம்.எச்.370 விமானம் எங்கு சென்றது. அதில் இருந்தவர்கள் நிலை என்ன என்ற கேள்விகளுக்கு இதுவரை பதில் இல்லை. ஒரே மர்மமாக இருந்து வருகின்றது.

கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக காணாமல் போயிருக்கும் மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் 370-ஐ கண்டுபிடிக்க புது திட்டம் உள்ளதாக ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

லண்டனில் உள்ள ராயல் ஏரோனாடிக்கல் சொசைட்டியில் நடைபெற்ற விரிவுரையில் புதிய வகை தேடலின் மூலம் பத்து நாட்களில் காணாமல் போன விமானத்தை கண்டுபிடிக்க முடியும் என்று வான்வெளி துறை நிபுணர்கள் ஜீன்-லூக் மார்சண்ட் மற்றும் விமானியான பேட்ரிக் பெல்லி தெரிவித்தனர். "நாங்கள் முறையான திட்டமிடல்களை மேற்கொண்டுள்ளோம். எங்களிடம் திட்டம் உள்ளது. இந்த பகுதி மிகவும் சிறியது. புதிய வகை வழிமுறைகளை கையாளும் போது 10 நாட்கள் ஆகலாம்.

ஆனால், இது விரைவில் நிறைவுபெறும் வகையில் இருக்கும். எம். எச்.370 பாகங்கள் கண்டுபிடிக்கும் வரை, அதற்கு என்ன ஆனது என்பது யாருக்கும் தெரியாது." என ஜீன்-லூக் மார்சண்ட் தெரிவித்தார்.

## பிகாரில் ஆசிரியர்களுக்கு நற்செய்தி

*பிகாரில்ஒப்பந்த அடிப்படையில் அரச பாடசாலைகளில் பணியாற்றி வந்த 3.5 லட்சம் ஆசிரியர்கள் நிரந்தர அரசுப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.*

*பாட்னாவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.*

*பிகார் மாநில அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.சித்தார்த் இது தொடர்பாக செய்தியாளர்களிடம் கூறியதாவது, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அரச பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்த 3.5 லட்சம் ஆசிரியர்களை நிரந்தர அரசுப் பணியாளர்களாக மாற்ற முடிவெடுக்கப்பட்டது.*

*இப்போதைய நிலையில் அவர்களது ஊதியம் ஏற்கெனவே உள்ள அளவிலேயே இருக்கும். பிகார் அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களுக்கு தேர்வுகளை நடத்தும். அதில் அவர்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் புதிய ஊதியம் நிர்ணயிக்கப்படும்.*

*ஒப்பந்த ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை கடந்த பல மாதங்களாக முன்வைக்கப்பட்டது. அதனை அரசு இப்போது ஏற்றுக்கொண்டுள்ளது என்று தெரிவித்தார்.*

## புத்தாண்டுக்கு பட்டாசு வெடிக்கத் தடை



ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் சார்ஜாவில் புத்தாண்டுக்கு பட்டாசு வெடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக செவ்வாய்க்கிழமை பொலிஸார் அறிவிப்பு விடுத்துள்ளனர். விதியை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இது போரினால் பாதிக்கப்பட்ட காஸாவிலுள்ள பாலஸ்தீனியர்களுக்கு ஒற்றுமையை வெளிப்படுத்த எடுக்கப்பட்ட தீர்மானம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காஸா பகுதியில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர் நடந்து வரும் நிலையில் 20,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் எழுபது சதவீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என நம்பப்படுகிறது.

இதேவேளை, ஹமாஸை அழிக்கும் வரை "அமைதி இருக்காது" என்று இஸ்ரேல் அண்மையில் கூறியதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. யுத்த நிறுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் இஸ்ரேல் இராணுவம் காஸாவின் தென் பகுதியில் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது. முற்றுகையிடப்பட்ட பிரதேசத்தினுள் மனிதாபிமான நெருக்கடிகள் காரணமாக யுத்த நிறுத்தத்திற்கான அழைப்புகள் அதிகரித்துள்ளன. காஸாவில் இதுவரை 2.4 மில்லியன் மக்கள் தண்ணீர், உணவு, எரிபொருள் மற்றும் மருந்து பற்றாக்குறையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்த அளவிலான உதவிகள் மட்டுமே எல்லைக்குள் செல்கின்றன. 1.9 மில்லியன் காஸா மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

## சில நிமிடங்களில் கீழே விழுந்து வெடித்துச் சிதறிய சீன ரொக்கெட்



விண்ணில் ஏவப்பட்ட சீனாவில் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள ஜிசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து லாங் மார்ச்-11 கேரியர் ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்டுள்ளது. குறித்த ரொக்கெட் செயற்கைக் கோள்கள் விண்வெளி தொழில்நுட்ப சோதனைகளை மேற்கொள்ள ஏவப்பட்டன. இந்த செயற்கைக் கோள் லாங் மார்ச்-11 ரொக்கெட் 20.8 மீட்டர் நீளமும், 2 மீட்டர் விட்டமும், 58 மெட்ரிக் டன் எடையும் கொண்டது. இது குறைந்த புவி சுற்றுப்பாதை அல்லது சூரிய-ஒத்திசைவு சுற்றுப் பாதைக்கு செயற்கைக் கோள்களை கொண்டு செல்லும் திறன் கொண்டது.

விண்ணில் சீறிப்பாய்ந்து சென்ற லாங் மார்ச்-11 கேரியர் ரொக்கெட்டில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. ரொக்கெட் திசை மாறி விண்ணில் இருந்து பூமியை நோக்கி வந்தது. ரொக்கெட்டின் பூஸ்டர்கள், அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் விழுந்து வெடித்து சிதறியது. இதனால் அங்கு தீ பிழம்பு ஏற்பட்டது. இந்த தொழில்நுட்ப கோளாறு காரணமாக விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

## 276 ஆசிய நாட்டவரை திருப்பியனுப்பிய பிரான்ஸ்

மனித கடத்தல் முறைப்பாடு காரணமாக பிரான்ஸில் சிக்கித் தவித்த 276 இந்தியர்கள் செவ்வாய்க்கிழமை (26) மும்பையைச் சென்றடைந்துள்ளனர். எனினும் அவர்களில். 27 பேர் பிரான்ஸில் தங்க அனுமதி கோரி உள்ளனர். லெஜெண்ட் ஏர்லைன்ஸ் விமானம் துபாயிலிருந்து 11 சிறுவர்கள் (தனியாக) உட்பட 303 பேருடன் கடந்த வாரம் நிக்கரகுவாவுக்கு சென்று கொண்டிருந்தது. பறந்துகொண்டிருந்த விமானம் எரிபொருள் நிரப்புவதற்காக பிரான்ஸின் வாட்ரி விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

இந்நிலையில் அந்த விமானத்தில் மனித கடத்தல் நடப்பதாக தகவல் கிடைத்ததையடுத்து. பிரான்ஸ் அதிகாரிகள் விமானத்தை தடுத்து நிறுத்தி பயணிகளை விமான நிலையத்தில் தங்க வைத்தனர். பயணிகளில் இருவரிடம் பிரான்ஸ் பொலிஸ் அதிகாரிகள் 4 நாட்களாக விசாரணை நடத்தினர். மேலும் பயணிகளிடம் நீதித்துறை விசாரணை நடைபெற்றது. இதில். பயணிகள் அனைவரும் தங்கள் விருப்பத்தின் பேரில் பயணித்தது தெரியவந்தது.

இதையடுத்து. விமானத்தை புறப்பட பிரான்ஸ் அதிகாரிகள் அனுமதி வழங்கிய நிலையில் வாட்ரி விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட அந்த விமானம் அதிகாலை 4 மணிக்கு மும்பையை சென்றடைந்துள்ளது. இதில் 276 பயணிகள் மட்டுமே சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்களாவர். 5 சிறுவர்கள் உட்பட 25 பேர் பிரான்ஸிலேயே தங்க அனுமதி கோரியதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை சர்வதேச சட்டப்படி. அடைக்கலம் கோருவோரை சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்ப முடியாது. மேலும் ஆட்களை கடத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரணை நடத்திய 2 பேர் பிரான்ஸிலேயே உள்ளனர். இந்த விமானத்தில் மும்பை வந்த பயணிகள் காலை 8.30 மணி அளவில் விமான நிலையத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். வெளியில் சென்ற அவர்கள் தங்கள் முகத்தை மூடியபடியே சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் திருப்பி அனுப்பப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பஞ்சாப். ஹரியானா மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தங்கள் பயணம் குறித்த தகவலை ஊடகங்களிடம் தெரிவிக்க அவர்கள் மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. அதேவேளை சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேற விரும்புபவர்கள். மத்திய அமெரிக்காவில் உள்ள நிக்கரகுவா சென்று அங்கிருந்து அமெரிக்க எல்லைக்குள் நுழைவதுண்டு. இந்நிலையில் தான் நிக்கரகுவா சென்ற விமானம் பிரான்ஸில் தடுத்து நிறுத்தப்பட்டதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விண்வெளியிலிருந்து பூமிக்கு வந்த பூனை - சாதனை படைக்கும் நாசா






பூமியில் இருந்து 19 மில்லியன் மைல் தொலைவில் இருந்து அதிக தரத்துடன் கூடிய பூனையின் வீடியோவை நாசா வெற்றிகரமாக பூமிக்கு அனுப்பிவைத்துள்ளது. விண்வெளி என்பது பல்வேறு ஆச்சரியங்களுக்கு உள்ளானது. விண்வெளி ஆய்வில் உலக நாடுகள் பலரும் ஈடுபட்டுள்ள நிலையில், அமெரிக்காவின் நாசாவுடைய பங்களிப்பு என்பது முதன்மையானதாக இருக்கிறது.

இந்நிலையில், விண்வெளி ஆய்வில் ஒரு புதிய வரலாற்றை நாசா படைத்துள்ளது. வியாழன் மற்றும் செவ்வாய் கிரகத்திற்கு நடுவில் இருக்கும் ஒரு மர்மமான எரிக்கல்லை ஆய்வு செய்வதற்காக விண்வெளியில் பயணம் செய்துகொண்டிருக்கிற "ளலஉாந விண்கலம், பூமியில் இருந்து 19 மில்லியன் மைல் தூரத்தில் உள்ளது. இந்த விண்கலத்தில் இருந்து லேசர் மூலம் முதன்முறையாக 15 விநாடிகள் கொண்ட பூனையின் வீடியோ பூமிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் விண்வெளியின் ஆழமான பகுதியில் இருந்தும் பூமிக்கு அதிக தரத்துடன் கூடிய வீடியோவை அனுப்ப முடியும் என்பதை உறுதி செய்துள்ளனர். செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தில் இந்த தொழிநுட்பம் தகவல் தொடர்புக்கு உதவியாக இருக்கும். விண்வெளியில் இருந்து பெறப்பட்ட வீடியோவை நாசா சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளது. அதில், டாட்டெர்ஸ் என பெயரிடப்பட்ட ஆரஞ்சு நிற பூனை ஒளியை தொடர்ந்து விளையாடும் வீடியோ இடம்பெற்றது.

இந்த ருடவசய-உனு வீடியோ 19 மில்லியன் மைல் தொலைவில் இருந்து சரியாக 101 விநாடிகளில் ஒரு நொடிக்கும் 267 மெகாபிட்ஸ் என்ற வேகத்தில் பூமியை வந்தடைந்துள்ளது. முதல் வீடியோவில் பூனை 1920களில் அமெரிக்காவின் ஒளிபரப்பு தொடக்க நிலையில் இருந்தது. அப்போது சோதனைக்காக பெலிக்ஸ் பூனையின் சிலை ஒளிபரப்பப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே விண்வெளியில் இருந்து அனுப்பிய வீடியோவிலும் பூனை காட்சிப்படுத்தப்பட்டதாக கூறியுள்ளனர்.

# வலையில் சிக்கிய பைசே மீன்

பொலிவியாவை ஒட்டிய அமேசான் நீர்நிலைகளில் மீன்பிடி தொழில் செய்து வரும் கில்லர்மோ ஒட்டா பாரம் என்பவரின் வலையில் முன்னெப்போதும் இல்லாத அரிய வகை மீன் சிக்கியுள்ளது.

வழக்கத்தில் பைசே (paiche) என அழைக்கப்படும் இந்த மீன், விலங்கியல் மொழியில் அரபைப்மா கைகாஸ் (Arapaipma gigas) என அழைக்கப்படுகிறது.

நன்னீர் (freshwater) மீன் வகைகளில் மிக பெரிய மீனான இது சுமார் 4 மீட்டர் (12 அடி) வரை நீளமும் 200 கிலோகிராம் நீளமும் உடையது.

ஆரம்பத்தில் இவ்வகை மீன் ஆபத்தானது என நினைத்து பிடிக்க அஞ்சிய மீன்பிடி தொழிலாளர்கள், இவற்றிற்கு பெருகிவரும் தேவைக்காக தேடி பிடிக்கின்றனர்.






இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 31.12.2023 அன்று வெளியிடப்பட்டது.